(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 7(8).]

# பாராளுமன்றம்

## 7ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2013 பெப்புருவரி 08 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2013 பெப்புருவரி 19, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பொருளாதார அபிவிருந்தி அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2012 திசெம்பர் மாதம் 19 ஆம் திகதிய 1789/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரிசுரிக்கப்பட்டதும் 2013.02.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2013 மார்ச்சு 07, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1554/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— கலாசார, கலை அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) விகாரமகாதேவி பூங்காவிற்கு அருகில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சீன கலாசார நிலையம், கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்கள் பிரதமராகப் பதவி வகித்த 2002- 2004 வரையான காலப்பகுதியில் சீன அரசாங்கத்திடமிருந்து இலங்கை அரசாங்கத்திற்குக் கிடைத்த ஒரு நன்கொடையா என்பதையும்;

(ii) அது ஒரு பூரணமான நன்கொடையா என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) சீன கலாசார நிலைய நிர்மாணத்தின் ஆரம்பத் திகதி மற்றும் முடிவுத் திகதி ஆகியவற்றையும்;

(ii) மேற்படி கருத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்ட மொத்தச் செலவு மற்றும் அது முடிவுறும் வேளையில் இறுதிச்செலவு ஆகியவற்றையும்;

(iii) ஊழியத்துக்காகச் செலவுசெய்யப்பட்ட செலவினத்தையும்

அவர் மேலும் கூறுவாரா?

(இ) (i) இக்கருத்திட்டத்தில் வேலைக்கமர்த்தப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்;

(ii) மேற்படி கருத்திட்டத்துக்காக கம்பனி அல்லது நாடு ஒன்றினால் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட பதவிப் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) சீன கலாசார நிலைய நிர்மாணக் கருத்திட்டத்தின் தொழிலாளர்கள் சார்பாகச் செலுத்தப்பட்ட ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி ஆகியவற்றின் பெறுமதிகளையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1826/ ’11

கௌரவ புத்திக பத்திரண,— விளையாட்டுத் துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 2011 உலகக் கிண்ண கிரிக்கட் போட்டித் தொடர் சம்பந்தமாக இலங்கை கிரிக்கட் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள செலவீனங்கள் பற்றிய அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்க முடியுமா என்பதை குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கை பிரிமியர் லீக் கிரிக்கட் போட்டித் தொடரின் ஒளிபரப்பு உரிமை வழங்கப்பட்ட கம்பனியின் பெயர் யாதென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராக செயற்படுகின்ற நபர் யாரென்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) 2011 உலகக் கிண்ண கிரிக்கட் போட்டித் தொடருக்காக இலங்கைக்குக் கிடைத்த பெரும் பணத் தொகையிலிருந்து அம்பாந்தொட்டை விளையாட்டு மைதானத்தை அமைப்பதற்கும் ஏனைய மைதானங்களுக்காகவும் செலவிடப்பட்ட தொகை தனித் தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2036/ ’11

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) இலங்கை கிரிகெட் நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் வெளிநாடு செல்வதற்காக 2008 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை அந்த நிறுவனத்தினால் வருடாந்தம் செலவு செய்யப்பட்டுள்ள தொகை;

(ii) மேற்படி ஒவ்வொரு வருடத்திலும் உத்தியோகத்தர்கள் வெளிநாடு சென்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் செலவு செய்துள்ள தொகை;

(iii) மேற்படி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உத்தியோகத்தர்கள் வெளிநாடுகளில் இருந்த நாட்களின் எண்ணிக்கை

வெவ்வேறாக யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகத்தர்கள் மேற்கூறியவாறு வெளிநாடு சென்றதனால் கிரிகெட் விளையாட்டுத்துறைக்குக் கிடைத்த சாதகமான அல்லது பாதகமான பெறுபேறுகள் யாவை;

(ii) வெளிநாடு சென்ற உத்தியோகத்தர்களின் பயணச் செலவுகள் தங்குமிடங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் மற்றும் ஏனைய செலவுகள் ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் ஏற்ப வெவ்வேறாக எவ்வளவு;

(iii) மேற்படி உத்தியோகத்தர்களின் சுற்றுலா விபரக் குறிப்புக்களை சமர்ப்பிப்பாரா;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களின் மாதாந்த சம்பளங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2220/ ’12

கௌரவ சஜித் பிரேமதாச,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) மகிந்த சிந்தனை தொலைநோக்குக் கொள்கைகளில் “செமட நிவசக் - ஹிதட செவணக்” வேலைத்திட்டத்தின் கீழ் நகர்ப்புற தொடர்மாடி வீடுகள், மற்றும் அரசின் வேறு வீடமைப்புத் திட்டங்களில் வசிப்பவர்களை தமது வீட்டின் அறுதி உரிமையாளர்களுக்கும் வேலைத் திட்டத்தை மூன்று மாதங்களினுள் நிறைவு செய்வதாக வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்கூறிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி மற்றும் முடிவடைந்த திகதி யாது என்பதையும்;

(ii) அந்த வேலைத்திட்டத்தின் கீழ் தமது வீட்டின் அறுதி உரிமையைப் பெற்ற நகர்ப்புற தொடர்மாடி வீடுகளில் வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) அரசாங்கத்தின் வேறு வீடமைப்புத் திட்டங்களில் வாழும் மேற்கூறியவாறு வீடுகளுக்கான அறுதி உரிமையைப் பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2550/ ’12

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 மே மாதம் 30 ஆம் திகதி கட்டுநாயக்க பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டினால் ரொஷேன் சானக்க எனும் இளைஞன் மரணமடைந்தமை சம்பந்தமாக பொலிஸ் விசாரணை இடம்பெற்றதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிட்ட இளைஞனின் மரணம் தொடர்பாக கண்டறிய நியமிக்கப்பட்ட மஹாநாம திலக்கரத்ன தனிநபர் ஆணைக்குழுவின் அறிக்கையை சமாப்பிப்பாரா என்பதையும்;

(ii) இறந்த இளைஞனின் குடும்பத்திற்கு நட்டஈட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அப்பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) இச்சம்பவத்தில் காயமடைந்தவர்களுக்கும் உடைமைகள் சேதமடைந்த நிறுவனங்களுக்கும் நட்டஈடு செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2906/ ’12

கௌரவ அனுர திஸாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது மாகாண சபைகளின் கீழ் நிருவகிக்கப்படும் பாடசாலைகளில் நிலவும் அதிபர்களுக்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை மாகாண வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2909/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மருத்துவர்கள் இன்மையால் நாடுபூராவும் பல கிராமிய வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) வைத்தியசாலைகளில் மருத்துவர்களின் பற்றாக்குறை நிலவுகின்ற சந்தர்ப்பத்தில், சுகாதார அமைச்சின் சில பதவிகளுக்கு பட்டப்பின் படிப்பு பட்டதாரி மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ள, அமைச்சின் மருத்துவம் சாராத பதவிகளுக்கு, தகைமையுடைய உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்காதிருப்பதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) அமைச்சினுள் ஏனைய பதவிகளை வகிக்கின்ற மருத்துவர்களை, வைத்தியசாலைகளில் நிலவுகின்ற மருத்துவர்களுக்கான வெற்றிடங்களுக்கு நியமிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3010/ '12

கௌரவ மொஹமட் அஸ்லம்,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி – கொழும்பு பிரதான வீதியை விஸ்தரிக்கும் கருத்திட்டத்திற்காக காலி வர்த்தகர்களின் வணிகக் காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) இதன்கீழ் காணி கொள்ளல் சட்டத்தின் 460 ஆம் அத்தியாயத்தின் 10(1) (அ) பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட காகச/முஅ/3/1/2002/08 ஆம் இலக்க 2005/10/13 ஆம் திகதிய அறிவித்தலின் பிரகாரம் சுவீகரிக்கப்பட்ட, காலி, தங்கெதர ஜிப்ரியா மாவத்தையில் 79 பி இலக்க இடத்தில் வசிக்கும் திரு.ஏ.எச்.எம்.மொஹிதீனின் வர்த்தக நிலையம் அமைந்துள்ள 215 ஆம் இலக்க காணித்துண்டு சார்பாக இதுவரை நட்டஈட்டுத் தொகை வழங்கப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி வர்த்தக நிலையத்தை உடைத்தகற்றி, சுவீகரிக்கப்பட்ட மேற்படி காணியின் சார்பாக திரு. மொஹிதீனுக்கு தாமதமின்றி நட்டஈட்டுத் தொகையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3163/ '12

கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார ஜயசிங்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) அரச ஊழியர்களுக்கு நான்கு சதவீத வட்டி அடிப்படையில் அரச வங்கிகளிலிருந்து வழங்கப்படுகின்ற ஆதனக் கடன் வழங்கல் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், அரச ஊழியர்களுக்கான மேற்படி ஆதனக் கடன் வழங்குதலை மீண்டும் ஆரம்பிக்கும் திகதி யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3164/ '12

கௌரவ பாலித தெவரப்பெரும,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்துகம புனித மேரி வீதி என முன்பு அழைக்கப்பட்ட தற்போதைய குமார வெல்கம மாவத்தையில் 1991ஆம் ஆண்டு தற்காலிகமாக நிர்மாணிக்கப்பட்டு பின்னர் 2005.03.30ஆம் திகதி பிரதேச சபை அங்கீகாரத்தின் படி நிரந்தரமாக நிர்மாணிக்கப்பட்டு மின்சாரத்தையும் பெற்றிருந்த 70 கடைகள் திடீரென உடைத்து அகற்றப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) இதன் காரணமாக 70 குடும்பங்களைச் சேர்ந்த அங்கத்தவர்கள் தற்போது நிர்க்கதிக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்;

(iii) புதிய கடைகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக பிரதேச சபையானது ஒவ்வொரு கடை உரிமையாளர்களிடமிருந்து ரூபா 100,000.00 முற்பணத் தொகையைப் பெற்றுள்ளதென்பதையும்;

(iv) புதிய கடைகளை நிர்மாணிப்பதற்காக பிரதேச சபைக்குச் சொந்தமான காணியொன்றில் மண் பரிசோதனை நடைபெற்றுள்ள போதிலும் இதுவரை இவை நிர்மாணிக்கப்பட்டு வியாபாரிகளுக்கு வழங்கப்படாதமையினால் அவர்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கடைகளை உடைத்து அகற்றுவதற்கு ஆலோசனை வழங்கியோர் யாவர் என்பதையும்;

(ii) புதிய கடைகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக அறவிடப்பட்ட முற்பணத் தொகை சம்பந்தமாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) புதிய கடைகள் நிர்மாணிக்கப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iv) கடைகளை இழந்த வியாபாரிகளுக்கு புதிய கடைகள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1886/ '11

கௌரவ புத்திக பத்திரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) காலி மாவட்டத்தின் அம்பலாங்கொடை வாடிவீடுக்கு சொந்தமான கட்டிடங்களை உடைத்தகற்றி மீள நிர்மாணிப்பதற்காக அடிக்கல் நாட்டப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்திருந்தும், இற்றைவரை மேற்படி நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வாடிவீட்டினை மீள நிர்மாணிக்கும் பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்,

(ii) மேற்படி நிர்மாணப் பணிகளுக்கு நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) ஆமெனில், ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அம்பலாங்கொடை நகர சபைக்கு சொந்தமான மேற்படி கட்டிடங்களை உடைப்பதற்கு ருகுணு உல்லாசப் பிரயாணக் காரியாலயத்திற்கு எவ்வாறு அதிகாரம் கிடைத்ததென்பதையும்,

(ii) மேற்படி நிர்மாணப் பணிகள் மீள ஆரம்பிக்கப்படுமா என்பதையும்,

(iii) ஆமெனில், அது எப்போதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2133/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2018 பொது நலவாய நாடுகளின் விளையாட்டு விழாவை இலங்கை பெற்றுக்கொள்வதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்விதம் திரட்டப்பட்டதென்பதையும்;

(ii) மேற்படி செலவுகள் மேற்கொள்ளப்பட்ட விடயங்கள் தனித்தனியாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி போட்டியின் அனுசரணை உரிமையை இலங்கைக்கு பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டட செலவின் காரணமாக இந்நாட்டுக்கு பயன்கள் கிடைத்தனவா என்பதையும்;

(ii) ஆமெனின், கிடைத்த அத்தகைய பயன்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி விளையாட்டு விழாவை இலங்கை பெற்றுக்கொள்வதற்காக செயலாற்றிய குழுவின் அங்கத்தவர் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு அங்கத்தவரினதும் பெயர், பதவி மற்றும் அதற்கான தகைமைகள் தனித்தனியே யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2191/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கைத் துறைமுக அதிகார சபையின் பொறுப்புகள் ஒவ்வொரு துறைமுகத்துக்குமாக தனித்தனியாகவும்;

(ii) துறைமுக அதிகார சபை தங்களால் பெறப்படாத கடனுக்காக உத்தரவாதம் கொடுத்த அல்லது வங்கி உத்தரவாதம் கொடுத்த அல்லது பொறுப்புகளை வகிக்கும் சந்தர்ப்பங்களையும்;

(iii) (அ) (i) இல் குறிப்பிடப்பட்ட பொறுப்புகளில் இலங்கை கிரிக்கெட் சபைக்கு வழங்கப்பட்ட பொறுப்புகள் சிறப்பாக கூறப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) நாட்டில் துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான அல்லது துறைமுக அதிகார சபைக்கு உரித்தான நிலங்களின் விஸ்தீரணத்தையும்;

(ii) கொழும்பு மாவட்டத்தில் துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான நிலங்களின் விஸ்தீரணத்தைத் தனித்தனியாகவும்;

(iii) துறைமுக அதிகார சபையின் ஒதுக்கப்பட்டுள்ள அல்லது நிறுவப்பட்டுள்ள நிலங்களில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளையும்;

(iv) துறைமுக அதிகார சபை பராமரிப்புக்காக செலவு செய்யும் நிலங்கள் அல்லது கட்டடங்களைக் கொண்ட நிலங்களையும்

அவர் கூறுவாரா?

(இ) 2011 ஆம் ஆண்டு முதல் இற்றை வரையான இலங்கைத் துறைமுக அதிகார சபையின் தேறிய இலாபத்தையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2221/ ’12

கௌரவ சஜித் பிரேமதாச,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) மகிந்த சிந்தனை தொலைநோக்குக் கொள்கைகளில் “செமட நிவசக்-ஹிதட செவணக்” வேலைத்திட்டத்தின் கீழ் வருடம் 2015 ஆம் ஆண்டாகின்ற போது சகல தோட்ட ஊழியர்களின் குடும்பங்களுக்கும் அடிப்படை வசதிகளைக் கொண்ட புதிய வீடொன்றை வழங்குவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வாக்குறுதிக்கமைய இதுவரை புதிய வீடுகள் கிடைக்கப்பெற்ற தோட்ட ஊழியர் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு எனப்தையும்;

(ii) தற்போது நிர்மாணிக்கப்பட்டுவரும் தோட்ட வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2910/ ’12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பயோ பவர் லங்கா நிறுவனத்தினால் இற்றைக்கு மூன்று வருடங்களுக்கு முன்னர் டெங்கு நுளம்பு ஒழிப்பிற்காக உற்பத்தி செய்யப்பட்ட பற்றீரியா, இதன் பொருட்டு கியுபாவிலிருந்து கொண்டுவரப்பட்ட பீ.ரீ.ஐ. பற்றீரியாவை விட சிறந்த பெறுபேறுகளைக் காட்டியுள்ளது என்பதையும்;

(ii) எனினும், மேற்படி பற்றீரியா இதுவரை டெங்கு நுளம்பு ஒழிப்புக்காக பயன்படுத்தப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) பீ.ரீ.ஐ. பற்றீரியாவுக்காக செலவாகும் பணத்தில் அரைவாசிக்கும் குறைவான பணத்தொகையில் பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ள மேலே குறிப்பிடப்பட்ட பற்றீரியாவை உற்பத்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளாப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) உள்நாட்டு உற்பத்தியான குறித்த ஆற்றல்மிக்க பற்றீரியாவை டெங்கு ஒழிப்புக்காக பயன்படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

## (2013 மார்ச்சு 07, வியாழக்கிழமை)

3009/ '12

கௌரவ மொஹமட் அஸ்லம்,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை கண்டி பிரதான வீதியில் அமைந்துள்ள பதியதலாவ ஜும்மா பள்ளிவாசலுக்கு வக்பு சபையினால் இறுதியாக நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு வழங்கப்பட்ட பொறுப்புடைமை முடிவுறும் திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி பள்ளிவாசலுக்கு சொந்தமான வர்த்தக நிலையங்களுக்கு வக்பு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் குத்தகை உடன்படிக்கைகள் இன்மையால் மேற்படி ஆதனங்கள் இவற்றில் வதிபவர்களின் அல்லது முகாமையாளர்களின் ஆதிக்கத்திற்கு உள்ளாகிய ஆதனங்களாக ஆகியுள்ளதை அவர் அறிவாரா?

(இ) (i) மேற்படி (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிலைமை பற்றி முஸ்லிம் சமய, கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் மூலம் தாமதமின்றி முறைசார்ந்ததொரு விசாரணையை மேற்கொள்வதற்கும்;

(ii) மேற்படி முஸ்லிம் பள்ளிவாசல்களுக்கு சொந்தமான ஆதனங்களை பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்குவதற்கும்

நடவடிக்கை எடுப்பாரா என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## 2013 மாச்சு 08, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1946/ '11

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இற்றைக்கு சுமார் ஓராண்டு காலம் தொடக்கம் கேகாலை மாவட்டத்தில் றம்புக்கனையில் அமைந்துள்ள வெள்ளைத் தும்புத் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதன் காரணமாக பிரதேசத்திலுள்ள பெருந்தொகையான மக்களுக்கு தொழில்களின்றி பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க நேரிட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி வெள்ளைத் தும்புத் தொழிற்சாலைசார்ந்த நிலையத்தினால் வேலையில்லாத இளைஞர் யுவதிகளை சுயதொழிலில் ஈடுபடுத்தும் நோக்குடன் பயிற்சிப் பாடநெறியொன்று நடத்தப்பட்டு வந்ததென்பதையும்;

(iii) புத்தாக்கங்களுக்காக சனாதிபதி விருதினைக் கூட வென்றெடுத்துள்ள மேற்படி நிறுவனம் மூடப்பட்டிருப்பதானது தேசிய ரீதியில் பாரியதொரு தவறாகும் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) ஆமெனில், மீண்டும் இத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுமா என்பதையும்;

(ii) அதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2192/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கடந்த இரண்டு வருடங்களில்,

(i) வெளிநாட்டு வேலைவாய்ப்பு, ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த வெளிநாட்டு பயணங்களின் எண்ணிக்கையையும்;

(ii) அவ்வாறு விஜயம் மேற்கொண்ட நாடுகளையும்;

(iii) இவ்விஜயங்களினால் அடைந்த நோக்கங்களையும்

வருடாந்த அடிப்படையில் அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) ஒவ்வொரு விஜயத்தின் போதும் அமைச்சருடன் சென்ற அதிகாரிகளின் எண்ணிக்கையையும் ஒவ்வொரு விஜயத்துக்கும் உறப்பட்ட செலவினத்தை வெவ்வேறாகவும்;

(ii) மேற்கூறப்பட்ட விஜயங்களின் போது பயன்படுத்தப்பட்ட நிதி பொதுப் பணமா அல்லது விஜயம் மேற்கொள்ளப்பட்ட நாடுகளின் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட பணமா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2222/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) மஹிந்த சிந்தனை தொலை நோக்குக் கொள்கைகளில் "செமட நிவசக்-ஹிதட செவணக்" வேலைத் திட்டத்தின் கீழ், மீனவ நகரங்கள் மற்றும் கிராமங்களை இலக்காகக் கொண்டு 30,000 வீடுகளை நிர்மாணிக்க 150 கோடி ரூபாவை ஒதுக்குவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வாக்குறுதியின் பிரகாரம் 150 கோடி ரூபா எந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டது என்பதையும்;

(ii) இன்றளவில் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) குறித்த வீடுகளில் குடியமர்த்தப்பட்டுள்ள மீனவக் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2410/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையின் தேசிய பிரச்சினைக்கு அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்திற்கும் அப்பால் சென்ற தீர்வொன்றைப் பெற்றுக்கொடுப்பதாக இலங்கையின் சனாதிபதியவர்களால் கூறப்பட்டதாக இந்திய வெளிநாட்டலுவல்கள் அமைச்சரால் அண்மையில் வெளியிடப்பட்ட கூற்றில் உண்மையுள்ளதா;

(ii) மேற்படி தேசிய பிரச்சினை சம்பந்தமாக அரசாங்கத்தினால் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iii) அவ்வாறெனில், அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்திற்கு மேலதிகமாக வழங்கப்படுகின்ற ஏனைய பிரேரணைகள் யாவை;

(iv) இதற்கு அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்துக் கட்சிகளினதும் அங்கீகாரம் கிடைத்துள்ளதா;

(v) மேற்படி பிரேரணைகள் அமுலாக்கப்படும் திகதி யாது;

(vi) இந்திய வெளியுறவு அமைச்சரின் மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்ட கூற்று உண்மையல்லவெனில், அது சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2537/ '12

கௌரவ அநுர திசாநாயக்க,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை ஒளிபரப்பும் உரிமையினை அரச தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கு மேலதிகமாக தனியார் தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கு வழங்குவதன் அடிப்படை யாது;

(ii) கடந்த தினம் இடம்பெற்ற கொமன் வெல்த் பாங்க் (Common Wealth Bank) கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டியை இலங்கையில் ஒளிபரப்பிய தொலைக்காட்சி அலைவரிசை யாது;

(iii) மேற்படி அலைவரிசையை அதற்கெனத் தெரிவு செய்ததன் அடிப்படை யாது;

(iv) சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை ஒளிபரப்புவதற்கு அனைத்து தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கும் அனுமதி வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2777/ '12

கௌரவ அஜித் பி. பெரேரா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012.01.01 ஆம் திகதியளவில் விவசாய ஓய்வூதிய நிதியத்தில் காணப்பட்ட மொத்தச் சொத்துக்களின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) விவசாய ஓய்வூதியம் கணிப்பிடப்படும் கொள்கையை இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) விவசாய ஓய்வூதியம் உரிய திகதியில், உரிய முறையில் செலுத்தத் தவறியமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2911/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) டெங்கு ஒழிப்புக்காக கடந்த வருடத்தில் கியுபாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பீ.ரீ.ஐ. பற்றீரியாக்களில் பெரும் பகுதி இன்றுவரை பயன்படுத்தப்படாதுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) கியுபாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பீ.ரீ.ஐ. பற்றீரியாக்களில் இன்றுவரை பயன்படுத்தப்படாது எஞ்சியுள்ள அளவு எவ்வளவென்பதையும்;

(ii) டெங்கு நோய் கொள்ளைநோய் நிலைமைக்கு மாறும் வரை நுளம்புகளை ஒழிப்பதற்காக மேற்படி பற்றீரியாக்களைப் பயன்படுத்தாதிருப்பதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3099/ '12

கௌரவ பி. ஹரிசன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 ஆம் ஆண்டளவில் வட மத்திய மாகாணத்தில் இனங்காணப்பட்டுள்ள சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) 2000 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் வடமத்திய மாகாணத்தில் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை வருடாந்த அடிப்படையில் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி நோயிலிருந்து மக்களை பாதுகாப்பதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) சிறுநீரக நோய் ஏற்படுவதற்கும், விவசாய இரசாயனப் பதார்த்தங்கள் மற்றும் இரசாயன உரப் பயன்பாட்டுக்கும் இடையே தொடர்புள்ளதா என்பதையும்;

(v) சிறுநீரக நோய்க்கும் மேற்படி பிரதேச மக்கள் குடிப்பதற்குப் பயன்படுத்தும் நீருக்கும் இடையே தொடர்புள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3142/ '12

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார,— பிரதம அமைச்சரும் புத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தில் படல்கும்புறு நகரத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நகர அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் நடைபெறும் வீதி விஸ்தரிப்பின் போது அனுமதி உரிமைக் காணிகளில் அமைந்துள்ள, கட்டிட வரைபடங்கள் அங்கீகரிக்கப்பட்டு அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்களை தகர்த்து அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என்பதையும்

(ii) இந் நடவடிக்கைகள் முன் அறிவித்தலின்றி நகர அபிவிருத்தி அதிகார சபையின் அலுவலர்களையும் இராணுவத்தினரையும் ஈடுபடுத்தி பலாத்காரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) வீதியை விஸ்தரிப்பதற்காக சட்டவிரோதமாக உடைக்கப்பட்ட கட்டிடங்களுக்கும் சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகளுக்கும் நட்டஈடு வழங்கப்படுமா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3167/ '12

கௌரவ ஈ. சரவணபவன்,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்துள்ளதும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமானதுமான, காங்கேசன்துறை வீதி, பலாலி வீதி, பருத்தித்துறை வீதி, கண்டி வீதி மற்றும் பிரதான வீதி ஆகிய 'ஏ' தரத்திலான வீதிகளின் புனரமைப்புப் பணிகள் 2009 மே மாதம் 19 ஆம் திகதிக்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை மேற்படி எந்தவொரு வீதியினதும் மேற்படி பணிகள் பூர்த்திசெய்யப்படவில்லையென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதிகளை புனரமைக்கும் பணிகளை பொறுப்பேற்றுள்ள ஒப்பந்தக் கம்பனி உள்நாட்டுக் கம்பனியா இன்றேல் வெளிநாட்டுக் கம்பனியா என்பதையும்;

(ii) இந்த புனர்நிர்மாணப் பணிகளுக்காக பயன்படுத்தப்படும் நிதி வெளி நாட்டுக் கடனுதவியா இன்றேல் அரசின் நிதியா என்பதையும்;

(iii) மேற்படி வீதிகளின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 03 வருடங்கள் கழிந்துள்ளபோதிலும், இதுவரை அந்தப் பணிகளைப் பூர்த்தி செய்ய முடியாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1947/ '11

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) மாத்தறை மாவட்டத்தில் திஹகொட பிரதேச செயலக ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள கபுதூவ நெசவுக் கைத்தொழில் நிலையக் கட்டடமும் அதன் உபகரணங்களும் தற்போது அழிவடைந்து வருகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அங்குள்ள வளங்களைப் பயன்படுத்தி மேற்படி பயிற்சி நிலையத்தை மீண்டும் சீரான நிலைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) இன்றேல், அந்த இடத்தை வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிலையமொன்றுக்கு அல்லது வேறு ஏதேனும் அலுவலொன்றுக்குப் பயன்படுத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2195/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கடந்த ஐந்து வருடங்களில், ஒவ்வொரு வருடத்திற்குமான லங்கா புத்ர அபிவிருத்தி வங்கியின்,

(i) பயன்படுத்தப்பட்ட மொத்த மூலதனம் மற்றும் ஒதுக்கங்களையும்;

(ii) உரிமை முதல் மீதான வருவாய் மற்றும் சொத்துக்கள் மீதான வருவாயையும்;;

(iii) பணியாட்டொகுதியினரின் மொத்த எண்ணிக்கை மற்றும் ஒரு ஊழியருக்கான செலவையும்;

(iv) மேற்குறிப்பிட்ட தகவல்களை ஒரு தனியார் துறை வங்கி நிறுவனத்தோடு ஒப்பு நோக்கியும்;

(v) மீண்டெழா செலவினங்களையும்;

(vi) அரசாங்கத்திற்கு விதிப்பனவுகளாகவும் தீர்வைகளாகவும் செலுத்தப்பட்ட மொத்தத் தொகையையும்;

(vii) இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2325/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) தொண்டர் சேவையில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் ஆசிரிய உதவியாளர்களாக கல்வி அமைச்சின் கீழ் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்பதை அவர் அறிவாரா ?

(ஆ) (i) தொண்டர் ஆசிரியர்கள் ஆசிரிய உதவியாளர்களாக ஆட்சேர்க்கப்பட்ட வருடம் யாது;

(ii) தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள ஆசிரிய உதவியாளர்களின் எண்ணிக்கை யாது;

(iii) ஆசிரிய சேவை 3-II தரத்துக்கு உள்ளீர்க்கப்பட்ட ஆசிரிய உதவியாளர்களின் எண்ணிக்கை யாது;

(iv) மேற்குறிப்பிடப்பட்ட ஒரு ஆசிரியருக்கு வழங்கப்படும் தற்போதைய மாதாந்த சம்பளம் யாது;

(v) ஆசிரிய உதவியாளர்களின் பதவிப் பெயரை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஆசிரிய உதவியாளர்களாக ஆட்சேர்க்கப்பட்ட அனைவரையும், ஆசிரிய சேவையின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் கீழ் நிரந்தரமாக்கி, குறித்த தரத்திற்கான சம்பள மட்டத்தில் அமர்த்துவதற்கும்;

(ii) ஆசிரிய உதவியாளர்களாக ஆட்சேர்க்கப்பட்ட திகதி முதல் அமுலுக்குவரும் வகையில் இவர்களை சேவையில் நிரந்தரமாக்குவதற்கும்

நடவடிக்கை எடுப்பாரா என்பதையும் அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2493/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2007 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை பொலிஸ் கான்ஸ்டபிள் தரத்திலிருந்து பொலிஸ் பரிசோதகர் தரம் வரை பதவியுயர்வு பெற்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை வருடாந்த ரீதியில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) தற்போது மேற்படி பதவிக்கு பதவியுயர்வு பெறுவதற்கு தகைமையுடையவர்களாக உள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இவர்களில் மேற்படி பதவியுயர்வினை பெறுவதற்கு தற்போது சிபாரிசு செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) இச்சிபாரிசுகளின் பிரகாரம் இவர்களுக்கு பதவியுயர்வு வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

(v) பதவியுயர்வினை பெறுவதற்கு தகைமையிருந்தும் அதன் பொருட்டு சிபாரிசுசெய்யப்படாத உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vi) இவர்களுக்கு பதவியுயர்வு வழங்காமைக்கான காரணம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தகைமைகளை பூர்த்திசெய்துள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பதவியுயர்வு கிடைக்காததன் அடிப்படையில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 145, 147, 151, மற்றும் 152 ஆகிய இலக்கமுடைய வழக்குகளுக்கேற்ப 2012.01.19 ஆம் திகதிய தீர்ப்பின் பிரகாரம் இவர்களுக்கு குறித்த பதவியுயர்வுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அவ்வாறு செயற்படாதவிடத்து, நீதிமன்றத்தை அவமதிக்கும் செயலாக இது அமையுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2968/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) புகையிரத திணைக்களம் சில புகையிரதப் பெட்டிகளை ஏற்கனவே தனியார் கம்பனிகளுக்கு ஒப்படைத்திருப்பதன் காரணமாக புகையிரதத் திணைக்களத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) புகையிரதப் பெட்டிகளை தனியார் கம்பனிகளுக்கு ஒப்படைப்பதன் மூலம் புகையிரதத் திணைக்களத்திற்குக் கிடைக்கும் வருமானம் எவ்வளவென்பதையும்;

(ii) புகையிரதப் பெட்டிகளை தனியார் கம்பனிகளுக்கு ஒப்படைப்பதன் மூலம் புகையிரதச் சேவையை தனியார் மயப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) தனியார் கம்பனிகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள புகையிரதப் பெட்டிகளை மீண்டும் புகையிரதத் திணைக்களத்திற்குப் பெற்றுக்கொள்ள நடவடிக்கையெடுத்து, புகையிரதச் சேவையை தனியார்மயமாக்குவதற்கு இடமளிக்காது பாதுகாப்பதற்காக நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா.13/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கைகளுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்தல்,— வறிய மக்களின் அடிப்படை உரிமைகள் மீறுதல், அரசாங்க கொள்கைகளில் உள்ளடக்கம் மற்றும் நடாத்துதல், மாநகர சபைகள் அதிகாரிகளினால் பொதுக் கடமைகள் நிறைவேற்றுதல், சமய உரிமைகள் அல்லது அடிப்படை உரிமைகள் மீறுதல் மற்றும் பொதுமக்களை கடனாளிகளாக்குகின்ற அல்லது அவர்களுக்கு மேலதிக பொறுப்புகள் ஏற்படுத்துகின்ற ஊழல்கள் ஆகியவை தொடர்பில் பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கைகளுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.14/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரசியல் கட்சிகளினால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு நிதி கணக்காய்வு அறிக்கையை வருடாந்தம் சமர்ப்பித்தல்,— எல்லா அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினாலும் பெறப்பட்ட வருமானமும் செலவிடப்பட்ட செலவினமும் பற்றிய கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமெனவும் வருடம் தோறும் தேர்தல் ஆணைக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.15/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச அலுவலர்களுக்கு தண்டனை வழங்குதல்,— அரச உயர் அலுவலர்கள் தமது சுதந்திர நிலைமையை அரசியல் மயமாக்கி மற்றும் அவர்கள் முறைகேடாக நடந்தால் அதனால் அவர்கள் குற்றவாளிகளாக கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுப் பத்திரங்களை கையளித்து தண்டனை விதிக்கப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.16/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வு பெறும் வயதெல்லையை நீடித்தல்,— அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 65 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டால் விசேட திறமையுள்ள அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 70 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.17/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— கல்வியைப் பாதுகாப்பதற்காக தரப் பாதுகாப்பு பேரவையொன்றை நிறுவுதல்,— பொறுப்பற்ற முறையில் பல்கலைக்கழக பெயர்களை பாவித்து இலங்கையினுள் பல கல்வி நிறுவனங்கள் உருவாக்கப்படுவதனால் கல்வியை எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாப்பதற்காக "தரப் பாதுகாப்பு பேரவையொன்றை" சட்டத்தின் மூலம் உடனடியாக நிறுவ வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.18/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— 'விசேட வழக்குத் தொடுநர்' எனப்படும் பதவியொன்றை உருவாக்குதல்,— அரச சேவை அரசியல் தலையீடுகளிலிருந்து விலக்குவதற்காக சுதந்திர ஆணைக்குழுக்கள், அரசாங்க கணக்குக் குழு, அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு ஆகியவற்றினால் நிறுவனங்களில் செயற்றிறமை பாதிக்கின்ற மோசடிகள், ஊழல்கள், செயற்றிறமையில்லாமை ஆகியவற்றை கண்டுபிடித்த உடனே பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்காக அவற்றுக்கெதிராக வழக்குத் தொடுக்கப்படுவதற்கு "விசேட வழக்குத் தொடுநர்" எனப்படும் பதவியொன்று உருவாக்கப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.20/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பணவீக்கத்திற்குப் பொருத்தமான வகையில் 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துதல்,— அரச நிறுவனங்களினால் நிர்வகிக்கப்படும் ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய பணங்களை செலுத்துவதில் ஒவ்வொரு வருடத்திற்கான பணவீக்க அளவுக்கு மேலதிகமாக 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துவதை உறுதிப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.21/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிரேஷ்ட பிரசைகளுக்கு இலவச பயண வசதிகள் ஏற்பாடு செய்தல்,— சகல சிரேஷ்ட பிரசைகளுக்கும் பொதுப்போக்குவரத்துச் சேவைகளில் இலவச பயண வசதிகளை ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.22/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்குதல்,— பல இன, மத மக்கள் வாழும் இலங்கையில் சமாதானத்திற்கு பங்கம் ஏற்படும் சவால்களை எதிர்நோக்குகின்றமையினால் அவைகளை இலங்கையிலும், பிராந்தியத்திலும் மற்றும் முழு உலகத்திலும் தீர்ப்பதற்காக பௌத்த, கிரிஸ்தவ, இந்து மற்றும் இஸ்லாம் ஆகிய மதங்களின் ஒழுக்க நெறிகளைக் கொண்ட, தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.23/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வு ஆகிய பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுத்தல்,— இதுவரை ஓய்வூதியப் பணிக்கொடையைப் பெற்றிராத ஓய்வு பெற்றவர்களுக்கு அப்பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.24/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய கொள்கையாக்க சபை ஒன்றினை நியமித்தல்,— முறைசார் தேசிய கொள்கை மற்றும் திட்டவாக்கம் தொடர்பில் அரசியல்வாதிகள், மற்றும் விடயம்சார் அதிகாரிகளைக் கொண்டதும் அரசாங்கம் மாறும்போது மாறாததுமான விசேட அதிகாரங்களைக் கொண்ட தேசிய கொள்கையாக்க சபையொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.25/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டில் வேலை செய்பவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் தொடர்பில் சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகை ஏற்படுத்தல்,— வெளிநாடுகளில் வேலைசெய்வோர்கள் முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகின்ற தாக்குதல்கள், ஆட்கடத்தல், கற்பழிப்பு, பெண்களை இழிதொழிலில் ஈடுபடுத்தல், ஆட்கொலைகள் மற்றும் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பு தொடர்பில் செல்லும்போது இடம்பெறுகின்ற மோசடிகள், வெளிநாடுகளில் அகதிகளாக்கப்பட்டுள் ளவர்களை திரும்ப அழைத்துக்கொள்ளல் மற்றும் அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் செயற்படக்கூடிய சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகு ஏற்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.26/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— புதிய கண்டுபிடிப்பாளர்களை உலகிற்கு அறிமுகப்படுத்து முகமாக தேசிய திட்டமொன்றினை உருவாக்குதல்,— புதிய கண்டுபிடிப்பாளர்களையும் பலதரப்பட்ட திறமைகளைக்கொண்ட பிரசைகளையும் உலகத்திற்கு அறிமுகப்படுத்து வதற்காகவும் அவர்களது திறமைகள் உருவாக்கங்களை மேம்படுத்துவதற்காகவும் தேசிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.27/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூர் மூலவளங்களை பயன்படுத்தும் கைத்தொழிலாளர்களுக்கு வரிச்சலுகைகள் வழங்கல்,— உலகச் சந்தைக்காக 75% உள் நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தி உற்பத்திகளை மேற்கொள்ளும் உள்நாட்டு கைத்தொழிலாளர்களுக்கு 2 வருடகால வரிச்சலுகை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.28/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தோட்ட சமுதாயத்திற்கு பிரசாவுரிமை வழங்குதல்,— இலங்கைப் பிரசாவுரிமையற்ற சகல தோட்டப்புற மக்களிற்கும் அவர்களது விருப்பத்தின் பேரில் பிரசாவுரிமை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.29/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தீவிலேயுள்ள ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கு ஒரு கோப்பைப் பால் வழங்குதல்.— தீவிலேயுள்ள சகல ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கும் காலையில் இலவசமாக ஒரு கோப்பை பால் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.30/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை ஒரு வாரகாலத்தினுள் விண்ணப்பதாரிகளுக்கு பெற்றுக் கொடுத்தல்,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை மீளப்பெற விண்ணப்பிப்பவர்களுக்கு ஒரு வார காலத்தினுள் அவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு உரிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.31/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாடசாலை மாணவர்களுக்கு இலவசப் பயணச் சீட்டு வழங்குதல்,— பாடசாலை மாணவர்கள் வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை பேரூந்துகளில் பிரயாணம் செய்வதற்காக இலவச பயணச்சீட்டுக்களை வழங்குகின்ற முறையொன்றினை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.32/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுப் பாடசாலைகளை அமைத்தலும் தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுத்தலும்,— நீண்ட கால இலக்குடைய தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுப்பதற்கான நடிவடிக்கைகளை எடுப்பதற்கான முதல் கட்டமாக சகல மாவட்டங்களையும் உள்ளடக்கூடிய வகையில் விளையாட்டரங்கு, விளையாட்டு மைதானம், விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டு போதனாசிரியர் களைக் கொண்ட உயர் மட்ட விளையாட்டுப் பாடசாலைகளை அமைக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.33/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய மொழிகளிற்கான கல்விப் பீடமொன்றினை நிர்மாணித்தல்,— ஆசிரியர்களிற்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளை கற்பிப்பதற்காக தேசிய மொழிகளிற்கான கல்விப்பீடமொன்றினை நிர்மாணிக்க வேண்டு மென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.44/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரசாங்க தகவல்களை சுதந்திரமாக பெற்றுக் கொள்வதற்காக சட்டங்களை இயற்றுதல்,— அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையை பேணுவதற்கும் பொதுமக்கள் அனைத்து அரசாங்க தகவல்களையும் சுதந்திரமாக பெற்றுக் கொள்வதற்கான உரிமைக்காகவும் பாராளுமன்றத்தில் சட்டங்கள் இயற்றப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.45/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையர்களுக்கு மிகவும் சிறந்த சுகாதார வாய்ப்புக்களை வழங்குதல்,— மக்களில் அதிகமானோர் இருதய சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய தேவை உடையவர்களாய் இருப்பதால் இலங்கையர்களுக்கு மிகவும் சிறந்த சுகாதார வாய்ப்புக்களை வழங்க வேண்டியிருப்பதாலும் அதற்காக தனியார் துறை ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியம் அல்லது ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினூடாக இலவசமாக வசதிகளை செய்துகொடுக்க வேண்டும் என்றும் அரசாங்க ஊழியர்கள் அல்லது தொழிலற்றோருக்கு அதற்கான முழு செலவையும் அரசாங்கத்தினால் சனாதிபதி நிதியத்தினூடாக வழங்குதல் வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.46/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— உலக சுற்றாடலை பாதுகாத்தல்,— இலங்கை உலக சுற்றாடலை பாதுகாக்கும் பொருட்டு கூடிய கவனம் செலுத்த வேண்டுமென்பதோடு புவி வெப்பமாதலை தவிர்ப்பதற்காக குறிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.47/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்ற நடவடிக்கைகளை ஒளிபரப்புதல்,— தொலைக்காட்சி அல்லது இணையம் மூலமாக பாராளுமன்ற நடவடிக்கைகள் நேரடியாக அல்லது தணிக்கை செய்யப்பட்டு ஒளிபரப்பப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.48/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாடுகளில் வசிக்கின்ற இலங்கையர்களுக்கு வாக்களிப்பதற்கான அனுமதியை வழங்குதல்,— வெளிநாடுகளில் வசிக்கின்ற இலங்கையர் களுக்கு எதிர்கால தேர்தல்களில் வாக்களிப்பதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.49/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலத்திரனியல் வாக்களிப்பு முறைமையினை அறிமுகப்படுத்துதல்,— தற்போதுள்ள பழைமையான வாக்களிப்பு முறைமைக்குப் பதிலாக இலத்திரனியல் வாக்களிப்பு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.57/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேருநர் இடாப்பை அடிக்கடி இற்றைப்படுத்துதல்,— தேருநர் இடாப்பு வருடத்தில் மாதமொன்றுக்கு முப்பது நாட்களுக்கு மட்டும் இற்றைப்படுத்தும் பட்டியலொன்றாக அல்லாமல் அது அடிக்கடி இற்றைப்படுத்தும் திறந்த பட்டியலொன்றாக இருத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.59/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ளோருக்கு ஓய்வூதிய முறையொன்றை அறிமுகப்படுத்துதல்,— வெளிநாடுகளுக்குச் சென்று மிகவும் சிரமத்திற்கு மத்தியில் உழைக்கும் செல்வத்தை, இலங்கையின் செல்வத்தை அதிகரிப்பதற்காக அனுப்புகின்ற, வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டுள்ளவர்களை மதிக்கும் வகையில் ஓய்வூதிய முறையொன்றை பெற்றுக்கொடுத்தல் வேண்டுமேன இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.60/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— 2009 மே மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர் சேவையில் இருந்த ஆயுதப் படையினருக்காக ஓய்வூதிய முறையொன்றை அறிமுகப்படுத்தல், — பாராளுமன்ற உறுப்பினர்கள் 5 வருட சேவைக்காலத்தை பூர்த்திசெய்த பின்னர் ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு தகைமைபெறுகின்றதனால் ஆயுதப் படைகளில் 22 வருடங்கள் பூர்த்தி செய்யாத போதிலும் 2009 மே மாதம் 19 ஆம் திகதிக்குப் முன்னர் சேவையில் இருந்த ஆயுதப் படையினருக்கும் ஓய்வூதியம் பெற்றுக்கொடுக்கப்படல் வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.62/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வலது குறைந்ததும் நடமாடமுடியாததுமான நபர்களுக்கு விசேட வடிவங்களை அறிமுகப்படுத்துதல்,— சட்டத்தில் குறிப்பிடப்படுகின்றவாறு வலது குறைந்தோரின் வசதிகளை உறுதிப்படுத்தவும் அவர்களிடமுள்ள வினைத்திறனை அதிகரிப்பதற்காகவும் அவர்கள் தேவையற்ற விதத்தில் பிறர்மீது தங்கிருப்பதைக் குறைப்பதற்காகவும் அரசாங்கத்தின் அனைத்து புதிய கட்டிடங்கங்களிலும் விசேட வடிவமொன்றை அமைக்க வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.63/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வாக்களிக்கும் உரிமையை உறுதிப்படுத்தல், – பதிவுசெய்திருந்தும் வாக்களிப்பதற்கான வாய்ப்புக்கிடைக்காத வாக்காளர் அநேக எண்ணிக்கையானோர் இருப்பதனாலும் 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து நபர்களுக்கும் வாக்களிக்கும் உரிமையை பெற்றுக்கொடுக்க வேண்டுமெனவும் தேருநர் இடாப்பில் பெயர் குறிப்பிடப்பட்டதன் பின்னர் வாக்களிக்காத நபர்களிடமிருந்து தண்டப் பணமொன்றை அறவிவிடுதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.64/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊழலற்ற உலகொன்றை உறுதிப்படுத்தல்,— ஊழலை முற்றாக ஒழிப்பதற்காக இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து உலகிலுள்ள பாராளுமன்ற அமைப்புக்களில் சேர வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 69/ ‘10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஏமாற்றப்பட்ட பண வைப்பாளர்களுக்கு தமது நிதிகளை மீளச் செலுத்துதல்,— போலி நிதி நிறுவனங்களில் தமது பணத்தை வைப்பிலிட்டு அதனால் ஏமாற்றமடைந்த அநேகமானோர் இருப்பதனாலும் கடந்த 2009/2010 தேர்தல் பிரசாரங்களில் இந்த அரசாங்கம் பண வைப்பாளர்கள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு அவற்றின் மிகுதிப் பணத்தை மீளச் செலுத்த வாக்குறுதி அளித்திருப்பதனாலும் மத்திய வங்கி இந்நிறுவனங்களின் பொறுப்பாளராக இருப்பதனால் மிகவும் வினைத்திறனுடன் செயற்படவேண்டுமென்பதோடு பண வைப்பாளர்களுக்கு அவர்களது மிகுதிப் பணத்தை பெற்றுக் கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 76/ ‘10

கௌரவ புத்திக பதிரண,— நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளமுடியாதுள்ள வயற்காணிகளை பயனுள்ள நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துதல்,— வயற் காணிகளை நிரப்புவதற்கான சட்டம் மீறப்படாத வகையில், ஒழுங்குமுறையான ஆய்வு ஒன்றின் மூலம் இனங்காணப்பட்டதன் பின்னர் எவ்வகையிலும் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியாத வயற் காணிகளில் பயனுள்ள விவசாய உற்பத்திகளை மட்டும் பயிரிடுவதற்கும், நிர்மாணப் பணிகளுக்காக எவ்வித வாய்ப்புகளும் கிடைக்காத வகையிலுமான நிகழ்ச்சித் திட்டங்களை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 77/ '10

கௌரவ புத்திக பதிரண,— அரச சேவையைச் சேர்ந்த ஓய்வூதியம் பெறுபவர்களின் சம்பள முரண்பாட்டினை நீக்குதல்,— 2006/6 சம்பள மீள்திருத்த சுற்றறிக்கையின் பிரகாரம் 2006.06.01 ஆம் திகதியிலிருந்து அமுலாகின்றவாறு அரச ஊழியர்களுக்கு சம்பள மாற்றம் வழங்கப்பட்டமையால் 2006.06.01 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற மற்றும் அதன் பின்னர் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கிடையில் பாரிய சம்பள முரண்பாடு நிலவுவதால் அதனை நீக்குவதற்கான ஒரு தேசிய வேலைத்திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 78/ '10

கௌரவ புத்திக பதிரண,— மாவட்ட மட்டத்தில் தகவல் மத்திய நிலையங்களை நிறுவுதல்,— புவியியல் அமைவு, வரலாற்றுப் பின்னணி, பயிரிடப்படும் பயிரினங்கள், வீதி முறைமை அரச அலுவலகங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், புகையிரத நிலையங்கள் மற்றும் பேரூந்து தரிப்பிடங்கள் ஆகிய அனைத்து தகவல்களும் கணனிமயப்படுத்தப்பட்ட மற்றும் ஆவணப்படுத்தப்பட்ட தகவல் மத்திய நிலையங்களை நிறுவுவதற்கும், அதன் முதலாவது கட்டத்தின் போது மகாகாண மட்டத்திலும் இரண்டாவது கட்டத்தின் போது மாவட்ட மட்டத்திலும் மூன்றாவது கட்டத்தின் போது பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேச மட்டத்திலும் இந்நிலையங்களை நிறுவவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 79/ '10

கௌரவ புத்திக பதிரண,— இலங்கையில் அறநெறி பாடசாலைகளின் கல்வி மற்றும் நிர்வாகத்தை ஒழுங்கு முறைப்படுத்தல்,— இலங்கையில் சகல மதங்களினதும் அறநெறி பாடசாலைகளின் கல்வி மற்றும் நிர்வாகத்தை மேலும் ஒழுங்கு முறைப்படுத்துவதற்கும் பௌத்த அறநெறி பாசாலைகளில் காணப்படும் அறநெறி இறுதிப் பரீட்சை மற்றும் அறநெறி தர்மாசார்ய பரீட்சை மற்றும் சகல மதங்களினதும் அறநெறி பாடசாலைகளில் நடாத்தப்படும் இவற்றுக்கு இணையான பரீட்சைகளின் சான்றிதழ்களுக்கு உரிய அங்கீகாரத்தை வழங்குதலும், அறநெறிப் பாடசாலைக்கு தொடர்ச்சியான மனித வளங்களுடன் பௌதீக வளங்களையும் வழங்குவதன் மூலம் அறநெறிப் பாடசாலைகளுக்கு சமுகமளிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு துரித வேலைத்திட்டமொன்றை வகுத்தலும் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 80/ '10

கௌரவ புத்திக பதிரண,— நாய்கள், பூனைகள் போன்ற செல்லப் பிராணிகளை வளர்த்தல் தொடர்பான சட்டங்களை வகுத்தல்,— வீடுகளில் அல்லது விற்பனை செய்வதற்காக வளர்க்கப்படும் நாய்கள், பூனைகள் போன்ற செல்லப்பிராணிகளை உள்ளூராட்சி நிறுவனங்களில் பதிவு செய்யத் தேவையான சட்டங்கள் வகுக்கப்பட வேண்டுமென்பதோடு, குறித்த பிராணிகளின் குட்டிகளை, சட்டரீதியான அனுமதி பெற்ற நிலையங்களில் மாத்திரம் விற்பனை செய்தல் வேண்டுமெனவும் அவ்வாறல்லாத இடங்களில் வளர்க்கப்படும் பெண்ணினப் பிராணிகளை கட்டாயமாக மலடாக்கலுக்கு உட்படுத்துவதற்கும், தேவையான சட்டங்கள் வகுக்கப்படவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 81/ '10

கௌரவ புத்திக பதிரண,— தொழில் சந்தைக்குத் தேவையான ஊழியர்களை பயிற்றுவித்தல்,— எதிர்காலத்தில் இலங்கையில் உருவாகும் புதிய தொழில் வாய்ப்புகளுக்குத் தேவையான ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் வழியொன்றைத் தொடங்கி வைக்கும் பணியை மிகவும் வினைத்திறனான வகையில், நாட்டினுள் காணப்படும் அனைத்து மூன்றாம் நிலைக்கல்வி நிறுவனங்களினூடாக ஆரம்பித்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 82/ ‘10

கௌரவ புத்திக பதிரண,— பொதுநிர்வாக கட்டமைப்பை மறுசீரமைத்தல்,— தற்சமயம் பொதுநிர்வாக அமைச்சினால் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எல்லைகளை மீள நிர்ணயிப்பதற்கனான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதோடு அவ்வாறு எல்லை நிர்ணயம் செய்யப்படும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளினூடாக புதிய பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேச எல்லைகளையும் புதிய மாவட்ட எல்லைகளையும் நிர்ணயிக்க வேண்டுமெனவும், இவ்வாறு நிர்ணயிக்கப்படும் பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசங்கள் உள்ளூராட்சி மன்ற ஆளுகைப் பிரதேசங்களாக மாற்றியமைக்க வேண்டுமெனவும், அத்தகைய ஆளுகைப் பிரதேசத்தினுள் கோட்டக் கல்வி அதிகாரப் பிரதேசம், பொலிஸ் அதிகாரப் பிரதேசம், கமநல சேவைகள் அதிகாரப் பிரதேசம், பிரதேச சுகாதார சேவை உத்தியோகத்தர் அதிகாரப் பிரசேதம் உள்ளிட்ட சகல அரச நிறுவனங்களினதும் அதிகாரப் பிரதேச எல்லைகள் உள்ளடங்கும் வகையில் ஒட்டுமொத்தமான பொதுத்துறைக் கட்டமைப்பும் திருத்தப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 83/ ’10

கௌரவ புத்திக பதிரண,— நில்வளா கங்கை திட்டத்தின் எதிர்கால அபிவிருத்திப் பணிகளை மீள ஆரம்பித்தல்,— மாத்தறை மாவட்டத்தின் நில்வளா கங்கை திட்டத்தின் அபிவிருத்திப் பணிகள் இடைநடுவில் முடங்கியிருப்பதால் அப்பள்ளத்தாக்கின் ஊட்டப் பிரதேசத்தில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளும் மக்கள் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், நில்வளா கங்கை திட்டத்தின் எதிர்கால அபிவிருத்திப் பணிகளை விரைவில் மீள ஆரம்பிக்க வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 84/ ’10

கௌரவ புத்திக பதிரண,— மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் மக்களின் பிரதிநிதிகளின் பதவிக் காலத்துக்குப் பின்னரும், சமாதான நீதவான் பதவியினை வழங்குதல்,— மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் மக்கள் பிரதிநிதிகளுக்கு வழங்கப்படுகின்ற, சமாதான நீதவான் பதவியானது, அவர்களது பதவிக் காலத்துக்கு மட்டும் வரையறுக்கப்பட்டுள்ளதாலும், இப்பதவிக்காலத்தின் பின்னரும், அவர்களிடம் மேற்படி சேவையினைப் பெறுவதற்காக வரும் அநேகமானோர் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என்பதாலும், இம் மக்கள் பிரதிநிதிகளுக்கு தமது பதவிக் காலத்தின் பின்னரும், சமாதான நீதவான் பதவியினை வழங்குவதற்கான தகுந்ததொரு வேலைத் திட்டத்தினை வகுத்தல் வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 85/ ’10

கௌரவ புத்திக பதிரண,— மாகாண சபை அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரினதும் கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகள் குறித்து மீளாய்வு செய்தல்,— நாட்டில் தற்போது இயங்கி வருகின்ற மாகாண சபைகள் மற்றும் எதிர்காலத்தில் ஒழுங்கு முறையாக செயற்படவுள்ள வடமாகாண சபையின், கௌரவ அமைச்சர்கள், தவிசாளர்கள், உபதவிசாளர்கள், ஆளும் கட்சியின் முதற்கோலாசான், சபைத் தலைவர்கள், எதிர்க் கட்சித் தலைவர்கள், எதிர்க் கட்சியின் முதற்கோலாசான் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் ஆகியோரின் கொடுப்பனவுகள், சிறப்புரிமைகள் மற்றும் வசதிகள் ஒழுங்கான முறையில் காணப்படாமையினால், இது தொடர்பாக ஆழமாக ஆராய்ந்து அதற்கான ஒழங்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 86/ '10

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி நிறுவனங்களின் அனைத்து மக்கள் பிரதிநிதிகளினதும் கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகளை மீளாய்வு செய்தல்,— நாட்டில் நடைமுறையிலுள்ள மற்றும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள அனைத்து மாநகர சபை, நகர சபை, மற்றும் பிரதேச சபைகளினதும் நகரபிதாக்கள், நகர சபைத் தலைவர்கள், மற்றும் பிரதேச சபைத் தலைவர்கள், பிரதி நகரபிதாக்கள், பிரதி நகர சபைத் தலைவர்கள், உப தலைவர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் ஆகியோரின் கொடுப்பனவுகள், சிறப்புரிமைகள் மற்றும் வசதிகள் ஒழுங்குமுறையாக இல்லாத காரணத்தால் இது தொட்பாக ஆழமாக ஆராய்ந்து இதற்கான ஒழுங்குமுறையுடன் கூடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 87/ '10

கௌரவ புத்திக பதிரண,— வடக்கு கிழக்கில் காணாமற் போன தமிழ் மக்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்குதல்,— வடக்கு கிழக்கு பிரதேசங்களில் யுத்தம் நடைபெற்ற கடந்த மூன்று தசாப்த காலமாக பல்வேறு காரணங்களால் காணாமற் போயுள்ளவர்கள் தற்போது உயிர் வாழ்கின்றார்களா, இல்லையா என்பதையிட்டு துரிதமாக விசாரணை செய்து, இவர்கள் உயிருடன் இல்லாதிருப்பின் இவர்களுக்கான மரணச் சான்றிதழ்களை வழங்குதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 88/ '10

கௌரவ புத்திக பதிரண,— தேசிய இளைஞர் கொள்கையொன்றை வகுத்தல்,— அனைத்து அரசியல் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தெரிகுழுவொன்றை நியமித்து, இலங்கைக்கு உகந்த தேசிய இளைஞர் கொள்கையொன்றை வகுத்தல் ஆரம்பிக்கப்பட்ட வேண்டுமெனவும் அந்நோக்கத்திற்காக அதனுடன் தொடர்புடைய அனைத்துத் துறைகளும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தேர்ச்சி பெற்றவர்கள் அறிஞர்கள் மற்றும் புத்திஜீவிகளினதும் அதேபோன்று அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 89/ '10

கௌரவ புத்திக பதிரண,— அரசாங்க பாடசாலைகளையும், பல்கலைக் கழகங்களையும் விடுமுறை நாட்களில் கற்கை அலகுகளுக்காகப் பெற்றுக்கொடுத்தல்,— அரசாங்க பாடசாலைகளின் விடுமுறை நாட்களிலும் பிற்பகல் நேரத்திலும், பல்கலைக்கழகங்களின் விடுமுறை நாட்களிலும், அந்த நிலையங்களை அடிப்படையாகக் கொண்டு, வர்த்தக சமுதாயத்தினரையும், அரச சார்பற்ற அமைப்புகளையும், வர்த்தகச் சபைகளையும், சமுதாய அடிப்படையிலான அமைப்புகளையும் இணைத்துக்கொள்கின்றதான விரிவானதொரு வேலைத்திட்டமாக, முதியோர் மற்றும் முறைசாரா கற்கை அலகுகள் சலுகைக் கட்டண அடிப்படையில் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 90/ '10

கௌரவ புத்திக பதிரண,— வெற்றிடமாகின்ற கிராம உத்தியோகத்தர் பதவிகளில் பதிற் கடமை புரியும் நியமனங்களுக்காக வினைத்திறன்மிக்க வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— கிராம உத்தியோகத்தர் பதவியில் வெற்றிடம் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் அண்மையிலுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர் மிகச் சிறியதொரு கொடுப்பனவின் அடிப்படையில் பதிற்கடமைக்காக நியமிக்கப்படுவதாலும், மேற்படி பதிற் கடமை நியமனத்தின் மூலம் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் இரண்டினதும் வினைத்திறன் வீழ்ச்சயடைவதாலும், இந்த நிலைமையை தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் கிராம உத்தியோகத்தர் சேர்மம் ஒன்றை அமைக்க வேண்டுமென்பதோடு, வெற்றிடம் ஏற்படுகின்ற பிரிவுகளுக்கு மேற்படி சேர்மத்திலிருந்து கிராம உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கும், மேற்படி சேர்மத்திலுள்ள கிராம உத்தியோகத்தர்களை, பிரதேச செயலாளரினால் ஒப்படைக்கப்படுகின்ற வேறு பயனுள்ள துறைகளில் அல்லது கடமைகளில் ஈடுபடுத்துவதற்குமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 91/ '10

கௌரவ புத்திக பதிரண,— தற்போது செயற்படும் சிவில் பாதுகாப்புக் குழுக்குகளுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரத்தை வழங்குதல்,— சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் அமைந்துள்ள மத வழிபாட்டுத் தலங்களின் தலைமை தேரர், மதகுரு, பாடசாலை அதிபர், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், கமத்தொழில் ஆராய்ச்சி உதவியாளர், சனசபைச் செயலாளர்கள், பிரதேசத்தின் பொலிஸ் நிலையத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு உத்தியோகத்தர், மற்றும் உரிய கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள தொண்டர் அமைப்புக்கள், அரச மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் உரிய பிரிவில் வசிக்கும் பிரதிநிதிகளை உள்ளடக்கிய சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்படுவதை மிகவும் எளிதாக்கும் பொருட்டு தற்போதைய சிவில் பாதுகாப்புக் குழுக்களுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரமொன்றை வழங்கக்கூடியவாறான பாராளுமன்றச் சட்டமொன்று நிறைவேற்றப்படுதல் வேண்டுமெனவும் அதனூடாக கிராம உத்தியோகத்தர் பிரிவில் நடைபெறுகின்ற குற்றச் செயல்கள், துர்நடத்தைகள் மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட பிரிவுகளுடன் சிறந்த தொடர்பைக் கட்டியெழுப்புவதற்கு இயலுமானவாறு குறித்த சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 92/ '10

கௌரவ புத்திக பதிரண,— நாட்டில் தற்பொது அமுலில் உள்ள காலங்கடந்த சட்டங்களை இற்றைப்படுத்துதல்,— தற்போதும் இலங்கையில் ஏகாதிபத்திய வழிகளின் காலத்தில் அறிமுகஞ் செய்யப்பட்ட சட்டங்கள் அமுலாகிவருவதால் காலங்கடந்த தண்டனைகள், தண்டப்பணம் என்பவற்றை இற்றைப்படுத்துவதற்கான தேசிய வேலைத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுத்தப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 93/ '10

கௌரவ புத்திக பத்திரண,— தேர்தல்ள் அனைத்தையும் ஒரே நாளில் நடத்துதல்,— இலங்கையில் 1988 இல் இருந்து 2010 வரையான 22 வருட காலப்பகுதிக்குள் 1990, 1992, 1995, 1996, 1998, 2003, மற்றும் 2007 ஆம் ஆண்டுகளைத் தவிர்ந்த ஏனைய ஒவ்வோர் ஆண்டிலும் ஏதேனும் ஒரு தேர்தல் நடத்தப்பட்டுள்ளதோடு அவ்விதமாக தேர்தல்களை நடத்துதலானது மக்களின் அபிப்பிராயத்தைக் கண்டறிவதற்கான பெறுமதி மிக்க அளவுகோலாக அமைந்த போதிலும், இதன் மூலமாக நாட்டின் பொருளாதாரம், நிருவாகம் போன்ற அனைத்துத் துறைகளிலும் தீவிரமான தாக்கம் ஏற்படுத்தப்படுவதால் உள்ளூராட்சித் தேர்தல்கள், பொதுத்தேர்தல்கள் மற்றும் சனாதிபதித் தேர்தலை ஒரே நாளில் நடத்துவதற்கேதுவாக மேற்படி நிறுவனங்களின் பதவிக் காலத்தை திருத்தியமைக்கவும் பொருத்தமான தேர்தல் வழிமுறையொன்றை உருவாக்கவும் தகுந்தவாறு அரசியலமைப்புத் திருத்தமொன்றை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 94/ '10

கௌரவ புத்திக பத்திரண,— பாராளுமன்ற சனநாயகத்தை வலுப்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளுதல்,— நாட்டினுள் சனநாயகத்தை மேலும் வலுவூட்டும் நோக்கத்துடன் பாராளுமன்றத்திற்கும் மாகாண சபைகளுக்கிடையிலும், மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கிடையிலும் சிறந்த இணைப்பினை பேணிவருதல் அத்தியாவசியமாயுள்ளதோடு, இதற்கு உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் மாகாண சபைகளில் பிரதிநிதித்துவம் வகிப்பதை உறுதிசெய்வதற்கும் மாகாண சபை தலைவர்கள் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிப்பதை உறுதி செய்வதற்குமான செயல்முறையொன்றை தயாரிப்பதற்குத் தேவையான அரசியலமைப்புத் திருத்தமொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 95/ '10

கௌரவ புத்திக பதிரண,— தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்,— தேசிய ஒருமைப்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் தமிழ் மொழி பேசுகின்ற மக்கள் வாழ்ந்து வரும் பிரதேசங்களில் சிங்கள மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் சிங்கள மொழி பேசுகின்ற மக்கள் வாழும் பிரதேசங்களில் தமிழ் மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும், அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களின் உதவியுடன் நடைமுறைப்படுத்தல் வேண்டுமென்பதுடன், அரச மற்றும் தனியார் இலத்திரனியல் ஊடகங்கள் மட்டுமன்றி அச்சு ஊடக நிறுவனங்களின் ஒத்துழைப்பினையும் பெற்றுக்கொண்டு இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான ஒரு தேசிய நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 96/ '10

கௌரவ புத்திக பதிரண,— வாழ்க்கைத் துணையின் தகாத செயல்களினால் நிர்க்கதிக்குள்ளாகும் தரப்பினருக்கு நிவாரணமளித்தல்,— திருமணமான கணவன் மனைவி தம்பதிகள் ஒரே வீட்டில் வாழ்கின்ற சந்தர்ப்பங்களில் கணவன் அல்லது மனைவி மதுபாவனை சூதாட்டம் அல்லது வேறு துர்நடத்தைகளில் ஈடுபட்டு, காணி, வீடு அல்லது வீட்டுப் பாவனைப் பொருட்களை தனது தற்றுணிபின் பிரகாரம் விற்பதன் காரணமாக அல்லது வேறு நபர்களுக்கு ஒப்படைப்பதன் காரணமாக மற்றைய தரப்பினருடன் பிள்ளைகளும் கடும் நிர்க்கதி நிலைக்குள்ளாகின்ற சந்தர்ப்பங்களில் அந்நிலைமையை தடுப்பதற்குத் தேவையான சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 98/ '10

கௌரவ புத்திக பத்திரண,— ஒழுக்க நெறிகள் பற்றிய குழுவை தாபித்தல்,— இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களின் நம்பகத்தன்மையையும் அவர்களிடத்தில் உயரிய ஒழுக்க நெறிகளையும் பேணவேண்டிய தேவைப்பாட்டைப் பற்றி ஆராய்வதற்காக ஒழுக்க நெறிகள் பற்றிய குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 99/ '10

கௌரவ புத்திக பத்திரண,— புதிய இலத்திரனியல் அடையாள அட்டையை வழங்குதல்,— நிர்வாகத்தை எளிதாக்குதல், குற்றங்களை கட்டுப்படுத்துதல் மற்றும் ஏனைய மோசடியான நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக் குறைப்பதற்காக, குறித்த நபரின் இரத்தப் பிரிவு, வங்கிக் கணக்குகள், கடன் அட்டை, கல்வித் தகைமை, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் வெளிநாட்டுப் பிரயாண கடவுச்சீட்டு இலக்கம் ஆகிய முக்கியமானதும் தேவையானதுமான தகவல்களை உள்ளடக்கிய புதிய இலத்திரனியல் இலக்கத்துடனான, தேசிய அடையாள அட்டையொன்று வழங்கப்படுதல் வேண்டும் எனவும், பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிக்கும் அனைவரது தகவல்களையும், கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மட்டத்தில் கணனிமயப்படுத்தலை துரிதப்படுத்தல் வேண்டும் எனவும் இத் தகவல்கள் அவ்வப்போது இற்றைப்படுத்தப்படல் வேண்டும் எனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 100/ '10

கௌரவ புத்திக பத்திரண,— ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் இருபது வருட சேவைக் காலத்தின் பின்னர், ஓய்வு பெறுவதற்கு வாய்ப்பளித்தல்,— பொலிஸ் திணைக்களத்தில் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான இருபது வருட சேவைக் காலத்தின் பின்னர், சுயவிருப்பில் ஓய்வு பெறுவதற்கான இயலுமானது, ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பிலும் ஏற்புடையதாதல் வேண்டுமென்றும் அதற்கான செயல்முறை ஒன்று உருவாக்கப்படல் வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 101/ '10

கௌரவ புத்திக பத்திரண,— ஒழுங்குவிதிகளை நீக்குவதற்கான குழுவை தாபித்தல்,— ஒழுங்குவிதிகள் உருவாக்கப்படுவதும் நீக்கப்படுவதும் அன்றாடம் இடம்பெறும் நடைமுறையாதலால், காலம் கடந்த ஒழுங்குவிதிகளை நீக்குவது பற்றி ஆராய்வதன் பொருட்டு ஒழுங்கு விதிகளை நீக்குவதற்கான குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 102/ '10

கௌரவ புத்திக பதிரண,— சிவில் பாதுகாப்புப் படையைச் சார்ந்த உத்தியோகத்தர்களை, சேவையில் நிரந்தரமாக்கல்,— சிவில் பாதுகாப்புப் படையைச் சார்ந்த உத்தியோகத்தர்களுக்கும் அரசாங்கத்தின் ஏனைய பாதுகாப்புப் பிரிவுகளில் மற்றும் திணைக்களங்களில் சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு உள்ளதைப் போன்று சம்பளம், கொடுப்பனவு, நிரந்தர சேவை மற்றும் ஓய்வூதியத்துடனான உத்தியோக அந்தஸ்து வழங்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 103/ '10

கௌரவ புத்திக பத்திரண,— உறுதியளித்தல் பற்றிய குழுவை தாபித்தல்,— பாராளுமன்றத்தில் கேட்கப்படும் வினாக்களுக்கு விடைகளாக அரசாங்கம் வழங்கும் உறுதி மொழிகளும் அரசாங்கத்தின் கடப்பாடுகளும் மீறப்படுகின்ற பல சந்தர்ப்பங்களைக் காணக்கூடியதாயுள்ளதால் அரசாங்கம் தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதையும் அவை தொடர்பில் பொறுப்புக் கூறுவதையும் உறுதி செய்யும் பொருட்டு உறுதியளித்தல் பற்றிய குழுக்களை தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 105/ '10

கௌரவ புத்திக பத்திரண,- புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்தல்,- இலங்கை புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளில் உள்ள அனுமதியற்ற கட்டுமானங்களையும் அனுமதியற்ற குடியிருப்பாளர்களையும் துரிதமாக அப்புறப்படுத்தி சட்டரீதியான கட்டுமானங்கள் தொடர்பான உடன்படிக்கைகளை மீளாய்வுக்குட்படுத்துவதன் மூலம் திணைக்களத்திற்கு கிடைக்கும் வருமானங்களை அதிகரிக்கச் செய்ய வேண்டுமென்பதுடன், திணைக்களத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நேரடி தாக்கத்தை ஏற்படுத்தாத காணிகளை நீண்ட கால குத்தகை அடிப்படையில் தனியார் துறைக்கு வழங்கி, அந்நிதியை புகையிரத வலைப்பின்னலின் நவீனமயமாக்கலுக்கு பயன்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.108/ '10

கௌரவ புத்திக பத்திரண,— பிச்சைக்காரர்களின் வாழ்வைப் பாதுகாப்பதற்கான முறையியலொன்றைத் தயாரித்தல்,— தற்போது பிச்சைக்காரர்களின் வாழ்வுக்கு பாரியளவில் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால் அவர்களது வாழ்வைப் பேணிக்காக்கும் பொருட்டு, அவர்களுக்கு பயிரிடுவதற்கான காணிகளை வழங்கி அதிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தில் அவர்களது வாழ்வின் பாதுகாப்பினையும் போசனையையும் உறுதிப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.109/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களின் மூலம் மனித உயிர்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தை தடுப்பதற்காக முறையியலொன்றைத் தயாரித்தல்,— கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களின் மூலம் மனித உயிர்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தை தடுக்கும் நோக்கத்தோடு, அரசாங்கம் நிலப் பரப்பொன்றை ஒதுக்கி கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களை அவ்விடத்திற்குக் கொண்டுசென்று அவற்றைப் பராமரிப்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.110/ '10

கௌரவ புத்திக பத்திரண,— சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் கடுமையான தண்டனைகளை விதித்தல்,— நாடு முழுவதிலும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் நாளுக்கு நாள் சடுதியாக அதிகரித்துவரும் நிலைமை ஏற்பட்டுள்ளதால், அது தொடர்பாக தற்போதுள்ள சட்ட விதிகள் போதியதாக இல்லாதிருப்பின், புதிய சட்ட விதிகளை புதிதாக நிறைவேற்றி மிகவும் துரிதமாக இது தொடர்பான வழக்குகளை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.111/ '10

கௌரவ புத்திக பத்திரண,— சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக கரையோர நுழைவுப் பாதைகளை அமைத்தல்,— நாட்டின் கரையோர வலயத்தில் துரிதமாக இடம்பெறுகின்ற நிர்மாணங்கள் காரணமாக உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் கடற்றொழிலாளர்கள் கடற்கரைக்கு பிரவேசிப்பதில் அசௌகரியம் ஏற்படுதலானது, சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கும் கடற்றொழிலை மேற்கொள்வதற்கும் தடைகளை ஏற்படுத்துவதனால், இந்நிலமையை தடுப்பதற்கும் இத்துறைகளை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டும் கடற்கரை நுழைவுப் பாதை முறைமையொன்று அமைக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.112/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி நிருவாக சேவை உத்தியோகத்தர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்குதல்,— அதிபர் சேவை, ஆசிரியர் சேவை, கல்வி நிருவாக சேவை ஆகிய சேவைகளில் பாரிய சம்பள முரண்பாடுகள் நிலவுவதால் இந்நிலைமையை போக்கி இவர்களின் சுய கௌரவத்திற்கு உகந்ததொரு சம்பளத்தைக் கிடைக்கச் செய்யும் வகையில், சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்குரிய முறையியலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.113/ '10

கௌரவ புத்திக பத்திரண,— பௌத்த பிக்குக் கல்வியை மேம்படுத்துதல்,— பௌத்த பிக்குமார்களின் மத அறிவை மேம்படுத்தும் நோக்கத்தோடு அவர்களின் பேச்சாற்றல், செவிமடுக்கும் ஆற்றல், கனணி, உளவியல் மற்றும் ஆலோசனை பற்றிய அறிவு என்பவற்றை மேம்படுத்துவதற்காக, தற்போதுள்ள பிக்குக் கல்வி நிறுவனங்களுக்குப் புறம்பாக இப்பணிக்ளுக்கே ஒதுக்கப்பட்டதான பிக்குக் கல்வி நிறுவனங்களை உருவாக்குவதற்கான முறையியலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.114/'10

கௌரவ புத்திக பத்திரண,— இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள நொத்தாரிசு சேவையை இற்றைப்படுத்துதல்,— இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள நொத்தாரிசு சேவை காலங்கடந்த சட்டங்களைக் கொண்டுள்ளதால் அது தொடர்பாக மீள பரிசீலனை செய்து தற்காலத்திற்குப் பொருத்தமானவாறு சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.115/'10

கௌரவ புத்திக பத்திரண,— உலர் வலய சேனைப் பயிர்செய்கையாளர்களின் பொருளாதாரத்தை வலுவூட்டுதல்,— உலர் வலயங்களில் சேனைப் பயிர்செய்கையாளர் களால் பயிரிடப்படுகின்ற நெல், குரக்கன், பயறு, எள்ளு ஆகிய பயிர்களின் விளைச்சலை அதிகரிப்பதற்கும் உற்பத்திப் பொருட்களை பதனிடுவதற்கும் ஏதுவான வகையில் புதிய தொழிட்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் தரச்சிறப்புவாய்ந்த வகையில் உற்பத்திகளை பதனிடுவதற்கும், உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் நடவடிக்கையை வலுவூட்டுவதற்கும் வரையறுக்கப்பட்ட கூட்டுறவு கம்பனிகள் தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.116/'10

கௌரவ புத்திக பதிரண,— ஆசிரியர் ஆலோசனை சேவையை உருவாக்குதல்,— இலங்கையில் கல்வித் தரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தோடு இற்றைக்கு சுமார் இருபது (20) வருடங்களுக்கு முன்னர் தொட்டு ஆரம்பமாகி நடைமுறையிலிருக்கும் ஆசிரியர் ஆலேசானை சேவையை தனியானதொரு சேவை அலகாக தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.118/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கோதுமை மாவிற்குப் பதிலாக அரிசி மாவை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்காக புதிய தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துதல்,— கோதுமை மாவிற்காக வெளிநாடுகளுக்கு வெளிப் பாய்ச்சப்படும் பெருமளவு செலாவணியை நிறுத்தும் நோக்கத்துடன், மாற்றீடாக பயன்படுத்தக்கூடிய அரிசி மாவினால் தயாரிக்கப்படும் உணவை பிரபல்யப்படுத்துவதற்கும், நார்த்தன்மை கொண்ட தானிய வகையான அரிசியை மிகவும் மென்மையானதாக கோதுமை மாவைப் போன்று அரைப்பதற்கும், கோதுமை மா அரைப்பதற்கு பயன்படுத்தப்படுவதைப் போன்ற இயந்திர உபகரணங்களையும் புதிய தொழில்நுட்பத்தையும் அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.119/ '10

கௌரவ புத்திக பத்திரண,— யுத்தத்தால் அங்கவீனமுற்றவர்களுக்கு நிவாரணம் வழங்குதல்,— ஏறக்குறைய 30 வருடகாலமாக நடைபெற்ற யுத்தம் காரணமாக அன்றாடம் நாட்கூலிக்கு வேலை செய்து வாழ்ந்த மக்கள் மற்றும் நிரந்தர தொழில் புரிந்த மக்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானோர் உடலுறுப்புக்களை இழந்து அங்கவீனர்களாக வாழ்க்கைச் சுமையினால் பெரும் பாதிப்புக்குள்ளாகி நிர்க்கதியான நிலையில் வாழ்வதால், அவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.120/ '10

கௌரவ புத்திக பத்திரண,— உயர் பிரமுகர்களின் பாதுகாவலர்கள் அனைவருக்கும் பிரயாணச் செலவுக் கொடுப்பனவொன்றை வழங்குதல்,— ஜனாதிபதி பாதுகாப்புச் சேவை மற்றும் பிரதம அமைச்சர் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களைப் போன்று ஏனைய உயர் பிரமுகர் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கும் சமமான பிரயாணச் செலவுக் கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.124/ '11

கௌரவ ருவன் ரணதுங்க,- கல்விசார் நூல்கள் தவிர்ந்த தினசரி பத்திரிகைகளிலும் வாராந்த சஞ்சிகைகளிலும் புத்தர் பெருமானின் உருவப் படங்கள் பிரசுரிக்கப்படுவதை தடைசெய்தல்,- தினசரி பத்திரிகைகள் மற்றும் வார சஞ்சிகைகளில் புத்தர் பெருமானின் உருவப் படங்களும் சிலைகளின் படங்களும் எதுவித கட்டுப்பாடுமின்றி எல்லையற்ற வகையில் அச்சிடப்படுவதோடு அந்த அட்டைகள் பல்வேறுபட்ட பொருட்ளின் உறைகளாகவும் வேறு பொருத்தமற்ற அலுவல்களுக்காகவும் பயன்படுத்தப்படுவது புத்தர் பெருமானுக்குச் செய்கின்ற அவமரியாதையாகுமென்பதால் 2600 ஆம் புத்தர் ஜெயந்தி கொண்டாட்டத்தையும் கருத்திற்கொண்டு இதன் பின்னர் கல்விசார் நூல்கள் தவிர்ந்த தினசரி பத்திரிகைகளிலும் வாராந்த சஞ்சிகைகளிலும் புத்தர் பெருமானின் உருவப் படங்கள் பிரசுரிக்கப்படுவதை தடைசெய்வதற்குத் தேவையான சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.127/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— காலி சர்வதேச விளையாட்டரங்கிற்கு மீள் பெயரிடுதல்,— இலவசக் கல்வியின் தந்தை காலஞ்சென்ற கௌரவ (கலாநிதி) சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர அவர்களுக்கு மரியாதை செலுத்தும் முகமாக காலி சர்வதேச விளையாட்டரங்கிற்கு அவரின் பெயரை சூட்டவேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.130/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேர்தல் நடைமுறைகள் மற்றும் தேர்தல்களை நடாத்துதல் பற்றிய பாராளுமன்றத் தெரி குழுவொன்றை நியமித்தல்,— தேர்தல் நடைமுறைகள் மற்றும் தேர்தல்களை நடாத்துதல் பற்றிய பாராளுமன்றத் தெரிகுழுவொன்று நிரந்தர அடிப்படையில் நியமிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.131/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகிய நிதியங்களிலிருந்து பணம் உடனடியாக செலுத்துதல்,— ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் ஆகியனவற்றுக்கு பங்களிப்புச் செய்கின்ற சகல அங்கத்தவர்களுக்கு செலுத்த வேண்டிய தொகைகள் செயல்படுநிலைத் தொழிலிருந்து ஓய்வு பெற்று ஒரு மாத காலத்தின் பின்னர் அவர்களுக்கான நிலுவைகள் செலுத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.132/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச ஊடகங்களில் பக்கச் சார்பற்ற தன்மையை உறுதிப்படுத்தல்,— அரச ஊடகங்கள் இலங்கைப் பிரசைகளின் விசேட உரிமையாக இருப்பதாலும், அரச ஊடகங்கள் தொடர்ச்சியாக அரசியல்மயப்பட்டு இருப்பதாலும், இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள சகல அரசியல் கட்சிகளுக்கும் அரச ஊடகங்களில் சமமாக நடதப்பட்டு சம வாய்ப்புகள் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.133/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச சேவையில் மொழித் தேர்ச்சியின் தேவைப்பாடுகள்,— 2025 ஆம் ஆண்டளவில் சகல அரச சேவை ஊழியர்களும், தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் கருமங்களை ஆற்றக் கூடியவர்களாகவும் கடிதப் பரிமாற்றல் மூலம் பணியாற்றுவதற்கும் பேசுவதற்கும் இயலுமையுடையவர்களாக இருப்பதை அரசாங்கம் கட்டாயமாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.134/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டினை வழங்குதல்,— இப்பாராளுமன்றத்தின் 225 உறுப்பினர்களும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1%ற்கு சமமாகின்ற பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீட்டிற்கு வருடாந்த அடிப்படையில் உரித்துடையவர்களாகவேண்டுமென்றும் மேலும் இந்த ஒதுக்கீடானது 50% மூலதனச் செலவின்மீது பயன்படுத்தப்படல் வேண்டுமென்றும் எஞ்சியுள்ளவை தனது வாக்காளர்களின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் விரும்புகின்றதும் அரசாங்கத்தின் வழிகாட்டலை அடிப்படையாகக் கொண்டதுமான எவ்வடிப்படையிலும் செலவழிக்கப்படலாமென்றும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.138 / 11

கௌரவ புத்திக பத்திரன,— பல்கலைக்கழகங்களால் நடாத்தப்படுகின்ற கற்கை நெறிகளை தொழில்மையக் கற்கைநெறிகளாக ஆக்குதல்,— நாட்டின் அனைத்து அரசாங்க பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களால் நடாத்தப்படுகின்ற கலைக் கல்விகளுக்கான பட்டப்படிப்பு கற்கைநெறிகளை தொழில்மையக் கற்கைநெறிகளாக மாற்றி அதன் மூலமாக உருவாகின்ற பட்டதாரிகளுக்கு புதிய தொழில்வாய்ப்புகளை வழங்கும் நோக்கத்துடன், அனைத்துப் பல்கலைக்கழகங்களுடன் அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களை இணைப்பதற்கான முறைசார்ந்த வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.139/'11

கௌரவ புத்திக பத்திரண,— பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்கின்ற வான்களுக்கான தரநியமங்களை விதித்தல்,— நாடு பூராவும் நடாத்தப்படுகின்ற பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்துச் சேவைகள் உரிய தரத்தில் இல்லாமையினாலும், சில பாடசாலை வான்களின் ஊழியர்களது நடத்தை சிறந்ததாக இல்லாமையினாலும், உரிய தரநியமங்களுடன் கூடிய வான் சேவையொன்றை நடாத்துவதற்காகவும், மேற்படி சேவையைப் பெறுகின்ற பாடசாலை மாணவ மாணவிகளது பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும் வான் சேவைகளுக்கான தரநியமங்களை அறிமுகப்படுத்துதல் வேண்டுமெனவும், வான் ஊழியர்களிடையே சிறந்த பழக்க வழக்கங்களைப் பேணிவருவதற்காக ஒழுக்க நெறிக் கோவையொன்றை அறிமுகப்படுத்துதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.140/'11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— தெங்குக் கமத்தொழில், தெங்கு சார் வளங்கள் ஆகியவற்றின் அபிவிருத்தியையும் மேம்பாட்டையும் ஒழுங்கமைத்தல்,— வர்த்தக ரீதியான உற்பத்திகளில் தென்னை முக்கிய இடத்தை வகிப்பதால், வளங்களையும், சுற்றாடலையும் நிலைத்து நிற்கச் செய்கின்ற அதேவேளை, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு குறிப்பிடக்கூடியளவு பங்களிப்புச் செய்யக்கூடிய விதத்தில் வளர்ச்சியடையும் அபிவிருத்தியை ஒழுங்கமைத்து தென்னைக் கைத்தொழில் மற்றும் தென்னை சார் வளங்கள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு அர்த்த புஷ்டியுள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.141/'11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— கித்துள் கைத்தொழிலை மேம்படுத்து முகமாக கித்துள் பயிர்ச்செய்கையை அதிகரித்தல்,— கிராமிய பிரதேசங்களில் கித்துள் பாரியளவு பங்களிப்பை வழங்குவதால், கிராமியக் கைத்தொழிலுக்கும் கிராமிய மக்களுக்கும் ஊக்கமளித்து தாவர உணவிற்காக வளர்க்கப்படும் கித்துள் மரங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும் என்னும் எமது குறிக்கோள் திட்டத்திற்கு அமைவாக புதிய கித்துள் பயிர்ச்செய்கைகளை அதிகரிப்பதற்கான தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.142/'11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— இலங்கையைச் சூழ மாசற்ற கடல்சார் சுற்றாடலை உறுதிப்படுத்தல்,— 2020 ஆம் ஆண்டளவில் ஸ்திரத்தன்மை மிக்க தேசிய அபிவிருத்திக்காகவும் இலங்கை மக்கள் மற்றும் அதன் பொருளாதாரம் ஆகியவற்றின் நலனுக்காகவும் இலங்கையைச் சூழ மாசற்ற கடல்சார் சுற்றாடலை உறுதிப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.143/'11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்,— மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கை மற்றும் அதனோடு தொடர்புடைய உற்பத்திகளின் பதனிடல், சந்தைப்படுத்தல் மற்றும் பயிர்ச்செய்கை ஆகியவற்றுக்கான உதவிகளை நல்கி அதன்மூலம் தரமான பெறுமதி சேர்க்கப்பட்ட மரமுந்திரிகையை உற்பத்திகளின் முன்னணி ஏற்றுமதி உற்பத்தியாளர் மற்றும் ஏற்றுமதியாளராக இலங்கையை திகழச் செய்வதற்கு உதவக்கூடிய விதத்தில் மரமுந்திரிகைச் செய்கையை அபிவிருத்தி செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.144/'11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— பாரம்பரிய கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல்,— அம்பாறை மாவட்டத்தில் அருகி வரும் பாரம்பரிய கைத்தொழில்களான கைத்தறித் தொழில், மட்பாண்டம் தயாரித்தல், பனை ஓலை மற்றும் பன்கொண்டு பெட்டி, தண்டு மற்றும் பாய் போன்றவற்றை இழைத்தல், தும்புத் தொழில், பிரம்புத் தொழில் ஆகியவற்றை அபிவிருத்தி செய்து அப்பகுதி மக்களுக்கு தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்தி அவர்களின் வருவாயைப் பெருக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.146/11

கௌரவ திலங்க சுமதிபால,— ஆயுத விற்பனைக்கான முறைசார்ந்த கட்டுப்பாட்டு முறையொன்றைத் தாபித்தல்,— சர்வதேச ரீதியில் எவ்வித கட்டுப்பாடுமின்றி ஆயுத விற்பனை நடைமுறையிலுள்ளதன் விளைவாக இலங்கை போன்ற நாடுகளுக்கு ஆயுதங்கள் வந்து குவிதல் மற்றும் அவ்வாறான நாடுகளில் இடம்பெறும் முறைசாராத ஆயுதச் சுற்றோட்டமானது சமூகத்தின் சுதந்திரத்திற்கு பாரிய தடையாகவும் சனநாயக ரீதியில் அதிகாரத்திற்கு வந்த அரசாங்கத்திற்கு அச்சுறுத்தலாகவும் தாக்கம் ஏற்படுத்துவதாகும், அத்துடன் நாட்டில் போதைப்பொருள் மற்றும் விபச்சாரத் தொழில் போன்ற சட்டவிரோதச் செயல்கள் விரிவடைவதற்கு காரணமாகவும் அமைந்துள்ளது. மேற்படி நிலைமைகளைத் தடுத்து ஒழுக்கம் பேணுகின்ற, சட்டத்தை மதிக்கின்ற, விழுமியங்கள் நிறைந்த சமுதாயமொன்றைக் கட்டியெழுப்புதல் மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கின் எதிர்பார்ப்பாக உள்ளதாலும், ஆயுத விற்பனை உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவதனூடாக சமூக போராட்டங்களைக் குறைத்து சமூக நலனோம்புகையை உறுதி செய்தல் இன்றைய உலகின் எதிர்பார்ப்பாகவுள்ளதாலும், மேற்குறிப்பிட்ட துர்நடத்தைகளை ஒழிப்பதற்காக சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் சமவாயங்களுக்கு ஏற்புடையதாக தேசிய சட்ட முறைமையொன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.147/11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,– பேரிச்சம் பழச் செய்கையை அறிமுகப் படுத்துவற்குரிய வாய்ப்புகள் பற்றி விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுதல்,– மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காத்தான்குடியில் பரீட்சார்த்தமாகப் பயிர் செய்யப்பட்ட பீனிக்ஸ் டெக்லிபெரா *(Phoenix dactylifera)* என்ற பேரிச்சம் பழச் செய்கை வெற்றியளித்துள்ளதால், எமது சொந்த மண்ணில் வளர்ந்த நற்சுவைமிக்க இப் பழத்தை சுவைப்பதற்கான வாய்ப்புகள் எமது நாட்டு மக்களுக்கும் கிடைக்கக்கூடியவாறு இப் பேரிச்சம் பழச் செய்கையை எமது நாட்டிலும் அறிமுகப்படுத்துவதற்குரிய வாய்ப்புகள் பற்றி விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இச்சபை கருதுகிறது.

பா.151/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— வானோலி ஒலிபரப்பை ஒழுங்குபடுத்தல்,— வானொலி ஒலிபரப்பை ஒழுங்குபடுத்தும் ஒரு சுயாதீன அதிகார சபையை கூட்டிணைப்பதற்கான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.152/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் ஒளிபரப்பை ஒழுங்குபடுத்தல்,— தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் ஒளிபரப்பை ஒழுங்குபடுத்தும் ஒரு சுயாதீன அதிகார சபையை கூட்டிணைப்பதற்கான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.153/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— மாநகர சபைகளில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவை அறிமுகம் செய்தல்,— 2013 சனவரி 1 ஆம் திகதியளவில் சகல மாநகர சபைகளிலும் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவைத் தாபிப்பதற்கான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.154/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— உரிமைகள் பிரகடனச் சட்டமூலத்தைச் சட்டமாக்குதல்,— தென்னாபிரிக்காவில் மனித கண்ணியம், சமத்துவம் மற்றும் சுதந்திரம் ஆகியவற்றின் ஜனநாயக விழுமியங்களை உறுதிப்படுத்தி, ஜனநாயகத்தின் ஆதாரமாகத் திகழ்கின்ற உரிமைகள் பிரகடனச் சட்டத்தை அடியொற்றி, சட்டமூலத்தில் விதித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்கு அமைவாக அரசினால் மதித்து, பாதுகாத்து, மேம்படுத்தி நிறைவேற்றப்பட்ட வேண்டிய நாட்டின் எல்லா மக்களினதும் உரிமைகளை உறுதிப்படுத்தும் சட்டமூலம் இலங்கையில் சட்டமாக்கப்பட வேண்டும் இந்தப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.155/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விசேட படிகள் கொடுப்பனவு,— அரச சேவைகள் ஆணைக்குழு மற்றும் சம்பளங்கள் பதவியணி ஆணைக்குழு ஆகியவற்றினால் அங்கீகரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படாதவிடத்து அமைச்சர், பிரதி அமைச்சர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் எவருக்கும் எந்த வகையான விசேட படிகளும் வழங்கப்படக் கூடாது என இப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.158/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையில் துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல்,— இலங்கை புவியியல் ரீதியாக மையப் பகுதியில் நன்கு அமையப்பட்டிருப்பதாக அறியப்பட்டிருந்ததாலும், பண்டைக் காலங்களிலிருந்த கடற்போக்குவரத்து என்பது ஒரு மிக முக்கியமான சேவைத் துறையாக இருந்து வருவதனாலும், அத்துடன் இந்தியா அதன் துறைமுகங்களை மிகுந்த ஆர்வத்துடன் அபிவிருத்தி செய்து மேம்படுத்தி வருகின்ற காரணத்தினாலும் நாம் இந்தியாவுடனும் இந்திய வியாபாரத்துடனும் அணிசேர்ந்து இரண்டு நாடுகளினதும் நன்மைக்காக துறைமுகங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.117/ '10

கௌரவ ருவண் ரணதுங்க,— உப பிரிவாக்கல் தடை செய்யப்பட்டுள்ள அரசாங்க அளிப்பு பத்திர காணிகளின் உப பிரிவாக்கல் அதிகாரத்தை பிரதேச செயலாளர்களிடம் ஒப்படைத்தல்,— ஜய பூமி, சுவர்ண பூமி,ரத்ன பூமி ஆகிய அரசாங்கக் காணி அளிப்புப் பத்திரங்களைக் கொண்டுள்ளவர்களின் காணிகளில் உப பிரிவாக்கல் தடை செய்யப்பட்டுள்ளதெனினும், ஆரம்பக் காணி பெற்றவர்களின் இரண்டாம் பரம்பரையின் உரிமையை உறுதி செய்வதற்கும் அவர்களின் வீடு, தோட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கும் உப பிரிவாக்கலுக்கான தேவை தோன்றும் போது மாகாண ஆணையாளர், காணி ஆணையாளர் மற்றும் ஜனாதிபதி செயலகத்துடனான தற்போது நடைமுறையில் உள்ள நீண்ட செயன்முறையை குறுகியதாக்கி உப பிரிவாக்க அதிகாரத்தை பிரதேச செயலாளர்களிடம் ஒப்படைப்பதற்கு தேவையான சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.159/ '12

கௌரவ புத்திக பத்திரண,— தேசிய மற்றும் சர்வதேச எதிர்கால கேள்விக்கு ஏற்றவாறு உற்பத்திகளை அதிகரிக்கச் செய்வதற்கான முறையியலொன்றை வகுத்தல்,— தேசிய மற்றும் சர்வதேச சமூகத்தினரின் எதிர்கால கேள்விக்கு ஏற்றவாறு கைத்தொழில் மற்றும் கமத்தொழில் உற்பத்திகள் தொடர்பாக எதிர்வுகூறலை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட உற்பத்திகள் சார்ந்த சகல துறைகளுடனான இடைத் தொடர்புகளின் ஊடாகவும் நவீன தொழிநுட்பத்தை உச்ச அளவில் பயன்படுத்தியும் உற்பத்திச் செயற்பாடுகளை அதிகரிக்கச் செய்வதற்கான முறையியலொன்றை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.160/ '12

கௌரவ புத்திக்க பத்திரண,— இலங்கை மக்களின் பாரம்பரிய மரபுரிமைகளை பாதுகாக்கும் பொருட்டு டிஜிடல் நூலகமொன்றை தாபித்தல்,— இலங்கை மக்களின் மரபார்ந்த அறிவை பாதுகாத்து, போஷித்து அதனை எதிர்கால சந்ததியினருக்கு கொண்டு செல்வதற்கும், மரபணு வளங்கள் மற்றும் உயிர் மரபுரிமைகளின் தவறான பயன்பாட்டை தடுப்பதற்காகவும் விரிவான தேசிய வேலைத்திட்டமொன்றின் தேவை உணரப்பட்டுள்ளதாலும் சுற்றாடல், சுதேச மருத்துவத் துறை, கமத்தொழில் மற்றும் பாரம்பரிய கைத்தொழில் உள்ளடங்கலாக சகல துறைகளுக்கும் டிஜிடல் தொழிநுட்பத்துடனான நவீன நூலகமொன்றை தாபிப்பதற்கும், அதன் பொருட்டு உலக புலமைச்சொத்து அமைப்பு (WIPO ), இலங்கை புலமைச்சொத்து பணியகம், சுற்றாடல் அமைச்சின் உயிர் பல்வகைமை அலகு உள்ளடங்கலாக சகல துறைகளும் ஒருங்கிணைந்த வேலைத்திட்டமொன்றை வகுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.161/ '12

கௌரவ புத்திக பத்திரண,— இலங்கைவாழ் மக்களின் மரபார்ந்த அறிவைப் பேணிப் பாதுகாப்பதற்கான தேசிய வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்தல்,— இலங்கைவாழ் மக்களின் மரபார்ந்த அறிவு கையாளப்படும் மருத்துவ முறைகள், கமத்தொழில், உணவுப் பாதுகாப்பு, கைப்பணிக் கைத்தொழிற்றுறை உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் காணப்படும் மரபார்ந்த அறிவை பாதுகாப்பதற்காக சம்பந்தப்பட்ட துறையில் ஈடுபட்டுள்ள மக்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொண்டு, உயிர் பல்வகைமை அலகு, புலமைச் சொத்துப் பணியகம் உள்ளிட்ட ஏற்புடைய துறைகள் ஒருங்கிணைந்து தேசிய வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகிறது.

பா.162/ '12

கௌரவ புத்திக பத்திரண,— இலங்கைக்கே தனித்துவமானதும் மருத்துவ ரீதியில் பெறுமதிமிக்கதுமான தாவரங்களின் மரபணு வளத்திற்கான ஆக்க உரிமத்தைப் பெற்றுக்கொள்ளல்,— வெளிநாடுகள் இலங்கைக்கே தனித்துவமான, பெறுமதிமிக்க மூலிகைத் தாவரங்களின் விளைதிறன்கொண்ட இரசாயனக் கூறுகள் மற்றும் மரபணு வளத்தினைக் கண்டறிந்து, அவற்றிற்கு மோசடியான முறையில் ஆக்க உரிமம் பெறுவதைத் தடுப்பதற்காக சம்பந்தப்பட்ட விளைதிறன்கொண்ட இரசாயனக் கூறுகள் மற்றும் மரபணு வளத்திற்கான ஆக்க உரிமத்தை இலங்கைக்கு பெற்றுக்கொள்வதற்கும் ஔடத உற்பத்தி மற்றும் அதன் மேம்பாட்டிற்கு அக் கூறுகளைப் பயன்படுத்துவதற்கும் உயிர் பல்வகைமை அலகு, புலமைச் சொத்துப் பணியகம் மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சு உள்ளிட்ட பொறுப்பு வாய்ந்த அனைத்து நிறுவனங்களும் இணைந்து விசேட வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகிறது.

பா.163/ '12

கௌரவ புத்திக பதிரண,— மக்கள் பிரதிநிதிகளின் கௌரவப் பெயர்களை கைவிடல்,— ஜனாதிபதி, பிரதம அமைச்சர் உள்ளிட்ட பாராளுமன்றம், மாகாண சபைகள், பிரதேச சபைகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற சகல மக்கள் பிரதிநிதிகளும் மாதாந்தம் தாம் ஆற்றும் சேவைக்குரிய சம்பளம் மற்றும் /அல்லது கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வதுடன், மேற்படி எந்தவொரு பதவியும் தன்னலமின்றி மேற்கொள்ளப்படுகின்ற கௌரவ சேவைகளாக இல்லாமையினாலும், மேற்படி பதவிகளை வகிப்பவர்களின் பெயர்களுக்கு எதிரே அல்லது பதவிக்கு எதிரே அதிமேதகு, பிரபு அல்லது கௌரவ ஆகிய பெயர்கள் மற்றும் பெயருக்குப் பின்னால் அவர்கள் போன்ற பதங்களை பயன்படுத்துவதானது நகைப்புக்குரிய விடயமாக மாறியுள்ளதனாலும், மக்கள் பிரதிநிதிகளின் கௌரவப் பெயர்களைப் பயன்படுத்துவதை நிறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.164/ ' 12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினை சுதந்திரமானதொரு நிறுவனமாக மாற்றுதல்,— பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சம்பந்தமான சகல தடங்கல்களையும், முக்கியமாக அரசியல் தலையீடுகள் மற்றும் ஆதரவுகளை அகற்றும் சுதந்திரமான ஒரு நிறுவனமாக ஆக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.165/ ' 12

கௌரவ ரவி கருணாநாயக்க,— தபால் மூல வாக்களிப்பை மாற்றீடு செய்வதற்காக "முன்கூட்டிய வாக்களிப்பை" அறிமுகம் செய்தல்,— தற்போது நடைமுறையிலுள்ள தேர்தல் முறைமையில் காணப்படுகின்ற குறைபாடுகளை சீர்செய்ய உதவும் "முன்கூட்டிய வாக்களிப்பினால்" தபால்மூல வாக்களிப்பை மாற்றீட செய்வதற்கு அரசியலமைப்பு திருத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.166/ ' 12

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஒரு வெளிப்படையான தேர்தல் இடாப்பினை அறிமுகம் செய்வதற்கு அரசியலமைப்பினை திருத்துதல்,— தற்போது பேணப்பட்டு வருகின்ற ஒரு நிலையான பட்டியலைப் போல் அல்லாது, தேர்தல் இடாப்பு வெளிப்படையான ஓர் இடாப்பாக இருக்கக் கூடியவாறு அரசியலமைப்பு திருத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.170/ '12

கௌரவ புத்திக பத்திரண,— முதியோர் பராமரிப்புச் சபை வேலைத்திட்டத்தை மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் விஸ்தரித்தல்,— பல்வேறு தரப்பினரால் முதிய பிரசைகள் புறக்கணிக்கப்படுவதால் நேரிடுகின்ற அநீதிகள் தொடர்பில் முறைப்பாடு செய்வதற்காக சமூக சேவைகள் அமைச்சின் முதியோர் செயலகத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற முதியோர் பராமரிப்புச் சபை வேலைத்திட்டத்தை மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் விஸ்தரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.171/ '12

கௌரவ புத்திக பத்திரண,— முதியோர் சமூகம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் பங்கேற்கச் செய்வதற்கு கடன் வழங்கும் வேலைத்திட்டமொன்றைத் தயார்செய்தல்,— 60 வயதைத் தாண்டியுள்ள முதியோர் சமுதாயத்தினரின் வாழ்வாதார வழிமுறைகளை வலுவூட்டி இலங்கையின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சியில் பங்கேற்கச் செய்வதற்கு வங்கி முறைமையின் ஊடாக கடன் வழங்கும் முறையியல் ஒன்று அமுல்படுத்தப்படாமையானது அவர்கள் சமூகத்தினுள் வித்தியாசமாகக் கவனிக்கப்படுவதாகும் என்பதால் அத்தகைய அநீதியான நிலைமையைத் தடுப்பதற்கு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று உருவாக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.172/ '12

கௌரவ புத்திக பத்திரண,— 60 வயதைத் தாண்டியுள்ளவர்களை சமூகத்தில் முனைப்பான நபர்களாக ஆக்குகின்ற வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்,— சமூக, பொருளாதார செயற்பாட்டின் முன்னேற்றத்திற்காக தமது உழைப்பை அர்ப்பணித்து, 60 வயதைத் தாண்டிய பின்னர் சமூகத்தில் முறையான அங்கீகாரம் இன்றி செயலிழந்து ஓரங்கட்டப்பட்டுள்ள முதியவர்களை, சமூகத்தின் முனைப்பான நபர்களாக ஆக்குவதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரிப்பதற்காக பாடசாலை சமுதாயம் உள்ளிட்ட முழுச் சமூகத்தையும் விழிப்புணர்வூட்டுகின்ற முறையியலொன்று உருவாக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2013 மார்ச் 19, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1968/'11

கௌரவ புத்திக பத்திரண,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தின் வெள்ளவாய பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள மல்வத்தாவெல பாடசாலை வீதிக்கு அருகில் கிரிந்தி ஆற்றுக்கு குறுக்கே பல கிராமங்களை தொடர்புபடுத்தும் வகையில் பாலமொன்றை அமைப்பதற்கு அளவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்ட போதிலும் இற்றைவரை பாலம் அமைக்கப்படவில்லை என்பதையும்;

(ii) மேற்படி இடத்தில் பாலமொன்று இல்லாததால் பல கிராமங்களை சேர்ந்த மக்கள் பெரும் கஷ்டத்திற்கு முகம்கொடுத்துள்ளார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்தை அமைப்பதற்கு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இதற்காக நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2200/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நிதி, திட்டமிடல் அமைச்சில் சொத்துகள் பதிவு இடாப்பு ஒன்று பேணப்படுகின்றதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், மேற்குறிப்பிட்ட பதிவு இடாப்பினைப் பேணும் நபர் யார் என்பதையும்;

(iii) அமைச்சின் தேறிய சொத்துப் பெறுமதி யாதென்பதையும்;

(iv) அமைச்சிலுள்ள 5 மிக முக்கியமான சொத்துகள் யாவை என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) சொத்துக்களின் உறுதிப்படுத்தல் மூலம் கற்பனைச் சொத்துகள் எவையாவது அமைச்சில் கண்டுபிடிக்கப்பட்டனவா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அச்சொத்துகளின் பெயர்கள் மற்றும் பெறுமதிகள் யாவையென்பதையும்;

(iii) அச்சொத்துகள் தொடர்பான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டனவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2328/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் சமமான கடமையில் ஈடுபடும் பொலிஸ் பாதுகாப்பு உதவியாளர்கள், இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் இணைக்கப்பட்டு சேவையில் நிரந்தரமாக்கப்பட்டு ஓய்வூதிய சம்பள முறைக்கு பங்களிப்புச் செய்யப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) பொலிஸ் பாதுகாப்பு உதவியாளர்களின் சேவை நிரந்தரமாக்கலானது பொலிஸ் திணைக்களத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் கீழ் இடம்பெற்றதா என்பதையும்;

(ii) இவர்களுக்கு பொருத்தமான சீருடையையும் கடமையில் ஈடுபடும் போது தகவல் குறிப்பு புத்தகத்தில் கடமைக்கு சமுகமளிப்பதை பதிவதற்கான அனுமதியையும் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு உரித்தான சம்பள உயர்வு, வலய கொடுப்பனவு, பிரயாணச் செலவு, கஷ்டப் பிரதேச கொடுப்பனவு, இதர கொடுப்பனவுகள் என்பன சேவை நிரந்தரமாக்கப்பட்ட திகதி தொடக்கம் பொலிஸ் பாதுகாப்பு உதவியாளர்களுக்கும் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இவ்வாறு செலுத்தப்படாவிடின் மேற்படி சலுகைகளை இவர்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2494/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாடகி நந்தா மாலினி உள்ளிட்ட குழுவினர் 2012.02.01 ஆம் திகதி குவைட் நாட்டிற்கு விஜயம் செய்த போது அந்நாட்டின் பாதுகாப்புப் பிரிவின் விசேட சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனரென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இவ்வாறான சோதனைக்கு உட்படுத்தப்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iii) மேற்படி சோதனையின்போது ஏதேனும் சந்தேகத்திற்கிடமான பொருளோ அல்லது தடையமோ இவரிடமிருந்து அல்லது அக்குழுவினரிடமிருந்து கண்டறியப்பட்டதா என்பதையும்;

(iv) மேற்படி சம்பவம் தொடர்பாக இலங்கை அரசாங்கம் விசாரணையொன்றை மேற்கொண்டதா என்பதையும்;

(v) இது சம்பந்தமாக இராஜதந்திர மட்டத்தில் ஏதேனும் வினவுதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) மேற்படி சோதனையிடல்கள் போலித் தகவல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அத்தகைய போலித் தகவல்களை வழங்கிய தரப்பினர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனரா என்பதையும்;

(vii) ஆமெனில், இவர்களின் விபரங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) திருமதி நந்தா மாலினிக்கு நேரிட்ட அசௌகரியம் சம்பந்தமாக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2551/ '12

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2012 பெப்புருவரி மாதம் 15ஆம் திகதி சிலாபம் பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு காரணமாக அன்ரனீ பர்னாந்து எனப்படும் மீன்பிடித் தொழிலாளி இறந்தார் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி துப்பாக்கிச் சூடு தொடர்பாக பொலிஸ் விசாரணை மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(ii) இறந்த மேற்படி மீன்பிடித் தொழிலாளியின் குடும்பத்திற்கு நட்டஈட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அப்பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2969/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த 7 மாத காலப்பகுதியில் இந்நாட்டில் 200 இற்கும் அதிகமான பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) மேலும் 1590 பாடசாலைகள் மூடப்படக்கூடிய ஆபத்துக்கு உள்ளாகியுள்ளன என்பதையும்;

(iii) பாடசாலை வகைப்படுத்தல்களின் கீழ் நவீன வசதிகளைக் கொண்ட பாடசாலைகளை ஏற்படுத்துவதாக அரசாங்கம் கூறியுள்ள போதிலும், அவ்வாறான ஒரு பாடசாலையையேனும் காண முடியவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) அரசாங்கத்தினால் வகைப்படுத்தப்பட்டுள்ள பாடசாலைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி வகைப்படுத்தலின் கீழ் நவீனமயப்படுத்தப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி பாடசாலை வகைப்படுத்தலின் கீழ் ஒரு பாடசாலைக்காக ஒதுக்கப்படுகின்ற பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இலவசக் கல்வியின் சமமான உரிமைகளை உயர்ந்தபட்சம் பிள்ளைகளுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு உதவியாயமைகின்ற அரசாங்க பாடசாலைகள் மூடப்படுவதற்கு இடமளிக்காது, அவற்றை நவீனமயப்படுத்தி நாட்டின் எதிர்கால சந்ததியினருக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2987/ '12

கௌரவ அஜித் பி. பெரேரா,— தொழில்நுட்பம், ஆராய்ச்சி, அணுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) தரம் உறுதி செய்யப்பட்டுள்ள ஒரு பொருளின் தரத்தை தொடர்ச்சியாக பேணிக்காப்பதற்கு இலங்கை தரக் கட்டளைகள் நிறுவகம் மேற்கொள்கின்ற நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) அது தொடர்பான சுற்றறிக்கைகள், ஒழுங்குவிதிகள் அல்லது கட்டளைகள் இருப்பின் அவை யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) சந்தையில் உள்ள S.L.S தரச்சான்றிதழைக் கொண்டுள்ள ஒரு வகை எஸ்பெஸ்ரஸ் கூரைத்தகட்டின் தரக்குறைவு தொடர்பாக விசாரணை மேற்கொள்ளுமாறு பண்டாரகம ஜகத் சந்திர பெரேரா மற்றும் புத்தி ஜயவிக்ரம பெரேரா ஆகியோர் 2011.09.23 ஆம் திகதி இலங்கை தரக் கட்டளைகள் நிறுவகத்தில் முறைப்பாடு செய்துள்ளதை அவர் அறிவாரா?

(இ) (i) மேற்படி முறைப்பாடு தொடர்பாக விசாரணை நடாத்தப்படாமைக்கான காரணம் யாது என்பதையும்;

(ii) மேற்படி கூரைத்தகடுகளுக்கு தரச்சான்றிதழ் வழங்கப்பட்டுள்ள திகதி யாது என்பதையும்;

(iii) மேற்படி கூரைத்தகடுகளின் S.L.S தரத்தை தொடர்ச்சியாக பேணிவருவதை உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) மேற்படி முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள கூரைத்தகட்டை உற்பத்தி செய்கின்ற நிறுவனம் அதன் உற்பத்திகளின் S.L.S தரத்தை பேணிவருகின்றதா என்பது பற்றி பரிசோதனை செய்வதற்காக 2011 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்ட திகதிகள் யாவை என்பதையும்;

(iii) அவை தொடர்பான அறிக்கைகளை சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

3101/ '12

கௌரவ பீ. ஹரிசன்,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) அநுராதபுர மாவட்டத்தில் சேவையாற்றுகின்ற சிவில் பாதுகாப்பு அலுவலர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கும் அமைய தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி அலுவலர்கள் பாதுகாப்புப் பிரிவின் கடமைகளுக்கு மேலதிகமாக வேறு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி கடமைகள் யாவை என்பதையும்;

(iv) மேலதிக கடமைகளில் ஈடுபடுகின்றமைக்காக மேலதிக நேரக் கொடுப்பனவுகள் மற்றும் வேறு கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றனவா என்பதையும்;

(v) ஆமெனில், ஒரு அலுவலருக்கு கிடைக்கும் மேற்படி கொடுப்பனவுகளின் பெறுமதி எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சிவில் பாதுகாப்பு அலுவலர்கள் வேளாண்மை, செங்கல் வெட்டுதல் மற்றும் ஆடுகள், பன்றிகளை வளர்க்கும் பண்ணைகளில் சேவையாற்றுதல் போன்ற மேலதிக கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(ii) செங்கல் கைத்தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஒரு அலுவலர் ஒவ்வொரு மாதமும் கட்டாயமாக 2000 செங்கற்களை உற்பத்தி செய்ய வேண்டுமென கட்டளையிடப்பட்டள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3143 / '12

கௌரவ ஆர்.எம்.ரஞ்சித் மத்தும பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுமார் நாற்பத்து மூன்று இலட்சம் பாடசாலை மாணவர்களில் உயர் கல்விக்கான வரத்தை பெறுகின்றவர்களின் சதவீதம் யாதென்பதையும்;

(ii) உலகத்தின் ஏனைய நாடுகளுக்கு ஒப்பீட்டளவில் மேற்படி சதவீதமானது ஆகக் குறைந்த மட்டத்தில் உள்ளதென்பதை எற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) கல்விக்காக 2012 ஆம் ஆண்டைத் தவிர கடந்த 20 ஆண்டுகளில் செலவிடப்பட்ட பணத் தொகை அந்தந்த வருடங்களின் மொத்த உள்நாட்டு வருமானத்தின் சதவீதமாக தனித் தனியாக எவ்வளவென்பதையும்;

(iv) 2012 ஆம் ஆண்டில் கல்விக்காக அரசாங்கம் ஒதுக்கியுள்ள பணத் தொகை மொத்த உள்நாட்டு வருமானத்தில் எத்தனை சதவீதமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பாடசாலைக் கல்விக்காக பெற்றோர்களிடமிருந்து பணம் சேகரித்தல் தற்போது பொதுவாக நடைமுறையிலுள்ள செயற்பாடாகும் என்பதையும்;

(ii) அரசாங்கம் கல்விக்கு போதியளவு பணத்தை ஒதுக்காமையே இதற்கான காரணம் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

3168/ '12

கௌரவ ஈ. சரவணபவன்,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) யாழ்ப்பாண மாவட்டத்தின் நல்லூர், மானிப்பாய் (வலிகாமம் மேற்கு), சுன்னாகம் (வலிகாமம் தெற்கு) ஆகிய பிரதேச சபைகளை நகரசபைகளாக தரம் உயர்த்துமாறு கோரி முறைசார்ந்த விதத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்புடைய திணைக்களங்கள் ஊடாக அனுப்பபட்டு பல மாதங்கள் கடந்துள்ள போதிலும் இதுவரை அது தொடர்பாக எவ்வித முன்னேற்றத்தையும் காண முடியவில்லையென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கோரிக்கைக்கமைய மேற்குறிப்பிட்டுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களை நகரசபைகளாக தரமுயர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1970/ ’11

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் பஸ்கொட பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள ரொட்டும்ப மத்திய மருத்துவ சாலை தற்போது மூடப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மூடப்பட்டுள்ள மருத்துவசாலையின் கட்டிடங்கள் அழிவடைந்து வருகின்றதென்பதையும்;

(iii) மருத்துவசாலை மூடப்பட்டுள்ளதனால் இப்பிரதேசத்திலுள்ள மக்கள் பெரும் அசௌகரியத்திற்கு முகம்கொடுத்துள்ளார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி மருத்துவசாலையின் கட்டிடங்களை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) தற்போது இதற்கான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், ரொட்டும்ப மத்திய மருத்துவசாலைக்கு உடனடியாக மருத்துவரொருவரை நியமித்து இப்பிரதேசத்திலுள்ள மக்களுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2201/ ’11

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தில் 2011ஆம் ஆண்டில் அமைச்சினால் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் நிர்மாணிக்க எதிர்பார்க்கப்படுகின்ற வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட வீட்டு நிர்மாணத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) புதிதாகக் கட்டப்பட்ட வீடுகள் இலவசமாகவா வழங்கப்படுகின்றன என்பதையும்;

(ii) இன்றேல், அவ்வீடுகள் விற்கப்படும் அல்லது வாடகைக்கு விடப்படும் விலையினையும்;

(iii) அந்த வீடுகள் என்ன அடிப்படையில் ஒதுக்கப்படுகின்றன என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2330/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை பொலிஸ் சேவைக்கு உதவுவதற்காக 2006.08.02 ஆம் திகதிய 16/1395/206/052 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய சிவில் பாதுகாப்புத் திணைக்களம் தாபிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) யுத்த சூழல் நிலவிய காலத்தில், தேசிய முக்கியத்துவம்மிக்க வைபவங்கள் மற்றும் பல்வேறு அனர்த்த சந்தர்ப்பங்களில் சிவில் பாதுகாப்பு அலுவலர்கள் பூரண அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளார்கள் என்பதையும்;

(iii) சிவில் பாதுகாப்புத் திணைக்களம் 2009.12.15 ஆம் திகதி வெளியிட்டுள்ள சுற்றறிக்கைக்கு அமைய 2009.10.31 ஆம் திகதியன்று தொடர்ச்சியாக 180 நாட்கள் சேவையை பூர்த்தி செய்துள்ள அலுவலர்களின் சேவையை துரிதமாக நிரந்தரமாக்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது சிவில் பாதுகாப்புச் சேவையில் ஈடுபட்டுள்ள பணியாட்டொகுதி எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி சேவையின் பல்வேறு துறைகளிலும் கடமையாற்றுகின்ற ஒவ்வொரு அலுவலருக்கும் தற்போது செலுத்தப்படுகின்ற நாளாந்தச் சம்பளம் எவ்வளவு என்பதையும்;

(iii) நாளாந்த சம்பளத்திற்கு சேவையாற்றுகின்ற மேற்படி திணைக்கள ஊழியர்களின் சேவையை நிரந்தரமாக்கி நிலையான சம்பள நிலையில் வைத்து அரசாங்க ஊழியர்களுக்கு உரித்தான சகல சிறப்புரிமைகளையும் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(iv) அதற்கு எடுக்கும் காலவரையறை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2495/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருணாகல் மற்றும் மாவத்தகம பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு சொந்தமான ஹதுருக்கந்த எனும் மலையில் அல்லது அதற்கு அண்மித்ததொரு மலையில் அமைந்துள்ள கருங்கற் பாறைகளை உடைத்து கற்குழியொன்று பேணிவரப்படுகின்றதா என்பதையும்;

(ii) இதற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், இதனோடு தொடர்புடைய ஆவணங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) மேற்படி, கற்குழியை பேணிவருபவர் யாரென்பதையும்;

(v) மேற்படி கற்குழி ஏதேனுமொரு நிறுவனத்திற்கு சொந்தமானதெனின் அதன் பெயர், முகவரி மற்றும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் பெயர் முகவரிகள் யாவையென்பதையும்,

(vi) மேற்படி கற்பாறை அமைந்துள்ள காணியின் உரிமையாளர்களின் பெயர், முகவரி, மற்றும் ஒவ்வொரு உரிமையாளருக்கும் சொந்தமான காணியின் அளவு வெவ்வேறாக யாவையென்பதையும்;

(vii) மேற்படி கற்பாறையை உடைத்தகற்றுவதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கற்குழி அமைந்துள்ள மலைத் தொடரிலிருந்து நீரைப் பெறுகின்ற வாவிகளேதும் உள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி மலைத்தொடரைச் சார்ந்ததாக இடம்பெறும் கருங்கல் உடைத்தலினால் சுற்றாடலுக்கு விளைகின்ற அழிவின் காரணமாக இதலிருந்து நீரைப்பெறுகின்ற வாவிகளின் நீர் மூலங்களுக்கும், உயிரினங்களுக்கும், இயற்கைத் தரைக்கும் ஏற்படுகின்ற சேதம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2970/ ’12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந் நாட்டின் தனியார் மருத்துவமனைகளில் பெருமளவு வெளிநாட்டு மருத்துவர்கள் பணியாற்றுகிறார்கள் என்பதையும்;

(ii) மேற்படி மருத்துவர்களின் பெரும்பாலானவர்கள் உரிய தகைமைகளை பூர்த்தி செய்யவில்லை என்பைதயும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந் நாட்டின் தனியார் மருத்துவமனைகளில் பணியாற்றும் வெளிநாட்டு மருத்துவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அந்த மருத்துவர்களில் உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்யாத மருத்துவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) இந் நாட்டில் பணிபுரியும் வெளிநாட்டு மருத்துவர்களை பதிவு செய்கின்ற போது அவர்களின் தகமைகளை பரிசோதிப்பதற்கான வேலைத் திட்டமொன்று நடைமுறையில் இருக்கின்றதா என்பதையும்;

(iv) இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ள ஆனால் தகமை பெறாத வெளிநாட்டு மருத்துவர்களின் பதிவினை இரத்துச் செய்து அவர்களினால் அப்பாவி நோயாளர்கள் ஆபத்துக்குள்ளாவதை தடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2013 மாச்சு 20, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1971/ '11

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்திலுள்ள தெனியாய கல்வி வலயத்தின் பஸ்கொட கோட்டக் கல்விக் அலுவலகம் இயங்குகின்ற கட்டிடம் மிகவும் மோசமாக பழுதடைந்துள்ளதென்பதையும்;

(ii) இக்கட்டிடம் மாற/ஊறுபொக்க தேசிய பாடசாலை வளவிலேயே அமைந்துள்ளதனால் இவ்வித்தியாலயத்தின் மாணவ/மாணவிகள் மட்டுமின்றி அங்கு பணியாற்றுபவர்களினதும் உயிருக்கு கடும் அச்சுறுத்தலாகும் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) ஆமெனில், இக்கட்டிடத்தை துரிதமாக புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அதற்காக நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2202/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கடந்த 2 வருடங்களில்,

(i) பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினாலும் பிரதி அமைச்சரினாலும் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு விஜயங்கள் யாவையென்பதையும்;

(ii) விஜயம் செய்த நாடுகளின் பெயர்கள் என்னவென்பதையும்;

(iii) இவ் விஜயங்கள் தொடர்பாக நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாகத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) அமைச்சருடனும் பிரதி அமைச்சருடனும் சென்ற அதிகாரிகளின் எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு விஜயத்திற்கான செலவினம் போன்றன வெவ்வேறாக யாவையென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட விஜயங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட நிதியானது அரச பணமா அல்லது விஜயம் செய்த நாடுகளின் அரசாங்கங்களினால் வழங்கப்பட்ட பணமா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2428/ ’12

கௌரவ சஜித் பிரேமதாச,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொழிலற்ற பட்டதாரிகளை அரச சேவைக்காக சேர்த்துக் கொள்வதற்கான வேலைத்திட்டமொன்று 2012 ஆம் ஆண்டில் அமுலாக்கப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வேலைத்திட்டத்தின் கீழ் பட்டதாரிகளை பகிரங்க சேவைக்காக சேர்த்துக் கொள்ளப்பட்ட போது கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறை யாதென்பதையும்;

(iii) அந்நடைமுறையானது தொழிலற்ற ஒவ்வொரு பட்டதாரிக்கும் நியாயம் ஈடேற்றப்படுகின்ற வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2496/ ’12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009 ஆம் ஆண்டு முதல் 2012ஆம் ஆண்டு வரை அரசாங்க வைத்தியசாலை களுக்கு மெத்தைகளை வழங்கிய நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(ii) குறிப்பிட்ட நிறுவனங்களைத் தெரிவு செய்யும்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப்பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அக்காலப்பகுதியினுள் கேள்விப்பத்திரங்களை முன்வைத்த நிறுவனங்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iv) 2011 ஆம் ஆண்டு அல்லது 2012 ஆம் ஆண்டின் ஆரம்ப காலப்பகுதியில் சிலாபம் மாவட்ட வைத்தியசாலைக்கு மெத்தைகளை வழங்கிய நிறுவனத்தினது உரிமையாளரதும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களினதும் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி நிறுவனம் வழங்கிய மெத்தைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(vi) இந்த மெத்தைகள் வைத்தியசாலைக்குக் கிடைத்த திகதி யாதென்பதையும்;

(vii) மேற்படி மெத்தைகள் கொள்வனவு செய்யப்படுவதை அங்கீகரித்த உத்தியோகத்தரின் அல்லது உத்தியோகத்தர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி மெத்தைகள்,

(i) சார்பாக வழங்கப்பட்டுள்ள தரச் சான்றிதழை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) பயன்படுத்தக்கூடிய ஆகக் குறைந்த கால எல்லை யாதென்பதையும்;

(iii) தற்போது பயன்படுத்தப்படுகின்றனவா என்பதையும்;

(iv) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) மேற்படி மெத்தைகளை வழங்கிய நிறுவனம் வேறு வைத்தியசாலைகளுக்கும் மெத்தைகளை வழங்கியிருப்பின் அந்த ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் வழங்கியுள்ள மெத்தைகளின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2973/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இருதய சத்திரசிகிச்சை மேற்கொள்ளவதற்காக அத்தியாவசியமான மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகள் இன்மை மற்றும் 2008ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட இருதய நோய்ப் பிரிவின் சத்திரசிகிச்சைக் கூடம் இன்றுவரை நிறுவப்படாமை ஆகிய காரணங்களால் குருநாகல் போதனா மருத்துவமனையின் இருதயநோய் சத்திர சிகிச்சை மருத்துவ நிபுணர்கள் மேற்படி மருத்துவமனையிலிருந்து வெளியேறியுள்ளனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) குருநாகல் போதனா மருத்துவமனையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இருதயநோய்ப் பிரிவின் சத்திரசிகிச்சைக் கூடம் திறந்துவைக்கப்படும் திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி மருத்துவமனையில் இருதய சத்திரசிகிச்சைகளை மேற்கொள்வதற்கு பற்றாக்குறையாகவுள்ள மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகள் தொடர்பான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) இருதய சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ளும் சகல மருத்துவமனைகளிலும் காணப்படுகின்ற குறைபாடுகளை ஆராய்ந்து சம்பந்தப்பட்ட மருந்துகள் மற்றும் உபகரணங்களை வழங்கி அப்பாவி இருதய நோயாளர்களை காப்பாற்ற நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3169/ '12

கௌரவ ஈ. சரவணபவன்,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வடக்கு – கிழக்கு உள்ளூராட்சி சேவைகள் அபிவிருத்திக் கருத்திட்டத்தின் மூலம் (NELSIP) 2010ஆம் ஆண்டு முதல் 2012ஆம் ஆண்டு வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்காக செலவழிக்கப்பட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாக யாது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்ட கருத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனத்தினாலும் தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்பட்ட சில பிரேரணைகள் மாவட்ட இணைப்பாளர் குழுவின் இணைத்தலைவர்களால் மாற்றப்பட்டுள்ளது என்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், மாற்றப்பட்டுள்ள குறித்த பிரேரணைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1973/ '11

கௌரவ புத்திக பத்திரண,— நீர்வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் முலட்டியன பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள முலட்டியென சனசமூக நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் இயந்திரக்கூடத்திற்கு மின்சாரம் இல்லாத காரணத்தால் சுத்தமான குடிநீரை பெற்றுக்கொள்ள இயலாமல் இப்பிரதேச மக்கள் பல பாரிய பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துள்ளார்கள் என்பதையும்;

(ii) இதற்கு நிதிவசதியினை வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் உறுதிமொழி வழங்கப்பட்டாலும் இற்றைவரை இதற்கு நிதி ஏற்பாடுகள் வழங்கப்படவில்லையென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு துரிதமாக மின்சாரத்தை வழங்குவதற்கு தேவையான நிதியை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எத்தேதியில் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2203/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு உட்படுத்தப்படாத, கடந்த 10 வருடங்களுள் நிறுவப்பட்ட அரசாங்கத்திற்குச் சொந்தமான சகல கம்பனிகளையும்;

(ii) மேலே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனிகள் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் திணைக்களத்தினால் கண்காணிக்கப்படுகின்றனவா என்பதையும்;

(iii) இன்றேல், நிதி திட்டமிடல் அமைச்சில் யாரால் அது மேற்கொள்ளப்படுகின்றது என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) மேலே (அ) - (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள கம்பனிகள் தொடர்பில்,

(i) அறவீடு விதிக்கப்பட்ட அல்லது அரசாங்கம் பங்கிலாபங்களைப் பெற்றுக் கொண்ட தாபனங்களின் எண்ணிக்கையினையும்;

(ii) எந்த விதமான நிதியினையும் மீளப்பெறமால் அரசாங்கத்தினால் கொடுப்பனவு செலுத்தப்பட்டு வரும் தாபனங்களின் எண்ணிக்கையினையும்;

(iii) ஒவ்வொரு தாபனத்திற்கும் அரசாங்கத்தினால் செலுத்தப்பட்ட தொகையினை வெவ்வேறாகவும்;

(iv) இந்த தாபனங்கள் ஒவ்வொரு வருடத்திற்கும் தேறிய இலாபத்தினையா அல்லது நட்டத்தினையா அடைகின்றன என்பதையும்;

(v) ஒவ்வொரு தாபனத்திலுமுள்ள ஊழியர்களின் எண்ணிக்கையினையும்;

(vi) ஒவ்வொரு தாபனத்திலும் அரசாங்கம் முதலீடு செய்துள்ள மொத்த மூலதனத்தினையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2430/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— கடற்றொழில் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் கடற்றொழிலில் ஈடுபடும் அனைத்து மீனவர் சமூதாயத்தினருக்கும் வாழ்க்கைச் செலவு மானியம் அல்லது எரிபொருள் மானியம் வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதனை நடைமுறைப்படுத்த எடுக்கப்படும் செயன்முறை யாதென்பதையும்;

(iii) ஒரு மீனவருக்கு வழங்க எதிர்பார்க்கப்படும் மானியத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) அந்தத் தொகையைக் கணிப்பீடு செய்ய பயன்படுத்தப்படும் அளவுகோள் யாதன்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2497/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அரிசி மாவைப் பயன்படுத்தி பான், பனிஸ் உள்ளிட்ட பேக்கரி உட்பத்திகளை பிரபல்யமடையச் செய்வதற்காக 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரை அரசாங்கம் ஒதுக்கிய பணத் தொகை வருட வாரியாக தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி உற்பத்திகளைச் செய்வதற்காக கொள்வனவு செய்யப்பட்டுள்ள இயந்திர சாதனங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு இயந்திர சாதனத்தினதும் பெறுமதி தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) இவை பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள நபர்கள் அல்லது நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(iv) தற்போது மேற்படி இயந்திர சாதனங்களின் நிலைமை எவ்வாறுள்ளதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) அரிசி மா சார்ந்த பேக்கரி உற்பத்திகள் தற்போது பெற்றுள்ள முன்னேற்றம் யாதென்பதையும்;

(ii) கோதுமை மா பேக்கரி உற்பத்திகளுக்குப் பதிலாக அரிசி மா பேக்கரி உற்பத்திகளின் பாவனையை நாட்டில் முழுமையாக ஏற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2974/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பலாங்கொடை மாவட்ட மருத்துவமனையில் 2012ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மூன்று தினங்களில் உணவு வழங்கல் தொடர்பாக நெருக்கடியொன்று தோன்றியிருந்தது என்பதையும்;

(ii) உணவு வழங்கலுக்கான கேள்விமனு முறையான விதத்தில் வழங்கப்படாமையே அதற்குக் காரணமாயிருந்ததென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) 2012 யூலை மாதம் 01 ஆம் திகதியிலிருந்து அம்பலாங்கொடை மாவட்ட மருத்துவமனையில் உணவு வழங்கலுக்காக வழங்கப்பட்டிருந்த கேள்விமனுவை இரத்துச்செய்வதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) உணவு வழங்கலுக்கான கேள்விமனு வழங்கப்படும்போது கடைப்பிடிக்கப்படுகின்ற செயல்நடைமுறை யாதென்பதையும்;

(iii) அம்பலாங்கொடை மாவட்ட மருத்துவமனையில் ஏற்பட்ட மேற்படி பிரச்சினை தொடர்பாக ஆராய்ந்து இவ்வாறான ஒரு நிலைமை மீண்டும் ஏற்படாதிருக்க முறைசார்ந்த விதத்தில் செயலாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1974/ '11

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 ஆம் ஆண்டில் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தின் கீழ் மிகை ஊழியர் அடிப்படையில் அரச நிறுவனங்களிலும் அரச பாடசாலைகளிலும் நிதி உதவியாளர், அபிவிருத்தி உதவியாளர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் என நியமனங்கள் வழங்கப்பட்டதென்பதையும்;

(ii) இவர்களுக்கு இற்றைவரை பதவியுயர்வு முறையியலொன்று உருவாக்கப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) அரச பாடசாலைகளில் பணியாற்றும் மேற்படி நியமனம் பெற்றவர்களுக்கு இப்பாடசாலைகளில் அல்லது வேறு பாடசாலைகளில் ஆசிரிய நியமனங்களை பெறுவதற்கான சாத்தியம் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இதற்கு பின்பற்றப்படவேண்டிய முறையியல் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி நியமனம் பெற்றவர்களுக்கு பதவியுயர்வுக்கான முறையியலொன்று உருவாக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், இதற்கு எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2205/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கடந்த ஐந்து ஆண்டுகளில் அரசாங்க மரக் கூட்டுத்தாபம் தொடர்பில்,

(i) பயன்படுத்தப்பட்ட மொத்த மூலதனம் மற்றும் ஒதுக்குகள் என்பன யாவையென்பதையும்;

(ii) இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(iii) மொத்த பணியாட்டொகுதியினர் எண்ணிக்கை, கிரயம் மற்றும் ஒரு பணியாளருக்கான இலாபம் போன்றன யாதென்பதையும்;

(iv) கழிப்பனவுகள் அல்லது அரசாங்கத்திற்கு செலுத்திய அறவீடுகள் யாதென்பதையும்

வருடாந்த அடிப்படையில் கூறுவாரா?

(ஆ) (i) அரசாங்க மரக் கூட்டுத்தாபத்தின் ஏதாவது பணம் கடந்த 5 ஆண்டு காலங்களில் பதிவழிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், பதிவழிக்கப்பட்ட தொகை யாதென்பதையும்;

(iii) என்ன காரணத்திற்காக அவ்வாறு செய்யப்பட்டது என்பதனையும்;

(iv) அவ்வாறு எப்போது நடைபெற்றது என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் கடந்த 5 ஆண்டு காலப்பகுதியிலே அது பணம் பயன்படுத்திய விதத்தை விட சிறந்த முறையில் வினைத்திறனாக பயன்படுத்தியிருக்க முடியுமா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அது எவ்வாறு செய்யப்படுகின்றது என்பதையும்;

(iii) இன்றேல், ஏன் அவ்வாறு செய்யப்படவில்லை என்பதையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2433/ ’12

கௌரவ சஜித் பிரேமதாச,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வேகம் ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி பொருளாதார வளர்ச்சி வேகங்கள் திருப்தியடையத்தக்க மட்டத்தில் நிலவியதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2498/ ’12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரை விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு செய்வதற்காக நெல் சந்தைப்படுத்தல் சபை செலவிட்டுள்ள பணத் தொகை யாதென்பதையும்;

(ii) மேற்படி நெல் கையிருப்பு மூலம் அரிசி உற்பத்தி செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள நெல்லின் அளவு யாதென்பதையும்;

(iii) குறிப்பிட்ட காலப் பகுதியில் பூச்சிகளினால் ஏற்பட்ட சேதம் மற்றும் கவனயீனம் ஆகிய காரணங்களினால் நெல் சந்தைப்படுத்தல் சபைக்குரிய களஞ்சியங்களில் அழிவடைந்த நெல்லின் பெறுமதி யாதென்பதையும்

வருட வாரியாக தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) நெல் சந்தைப்படுத்தல் சபை கொள்வனவு செய்ததன் பின்னர் பூச்சிகளினால் அல்லது ஏனைய காரணங்களினால் அழிவடைந்த நெல் கையிருப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2013 மார்ச்சு 21, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1975/ ’11

கௌரவ புத்திக பத்திரண,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் மன்னார் கடற்படுகையில் எண்ணெய் ஆராய்ச்சி நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டுள்ள கம்பனியினதும் அது உரித்தாகின்ற நாட்டினதும் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) எண்ணெய்க் கிணறுகளை அகழ்வதற்கான உடன்படிக்கையில் உள்ளடங்கியுள்ள நிபந்தனைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மன்னார் கடற்படுகையில் எண்ணெய்க் கிணறுகளை அகழ்கின்றபோது அதன் எந்தவொரு நடவடிக்கையையும் மேற்பார்வை செய்வதற்கோ அதற்குரிய தீர்மானங்களை மேற்கொள்வதற்கோ இலங்கை அரசாங்கத்திற்கு முடியாதுள்ளதென்பதையும்;

(ii) இந்த நிலைமையின் கீழ் எண்ணெய்க் கிணறுகளை அகழ்வதற்கான உடன்படிக்கையின் வெளிப்படைத் தன்மை தொடர்பாக சிக்கல்கள் எழுகின்றன என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

2206/ ’11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்போதைய அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி அமைச்சுகளுக்கான 2012 ஆம் ஆண்டு மொத்த வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி ஒதுக்கீடுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதத்தில் யாதென்பதையும்;

(iv) அந்த அமைச்சுகளில் வேலை செய்யும் ஆட்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு என்பதனையும்;

(v) மாதமொன்றுக்கு ஒரு அமைச்சுக்கான மொத்த செலவினம் எவ்வளவு என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) மேலே சொல்லப்பட்ட ஏதேனும் அமைச்சுகளை இல்லாதொழிக்கவோ அல்லது குறைக்கவோ முடியுமா என்பதையும் அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2437/ ’12

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை கல்வி நிருவாகச் சேவையில் கல்விப் பணிப்பாளர் பதவிகளில் பதில் கடமையாற்றும் பதில் கல்விப் பணிப்பாளர்களின்,

(i) எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) பெயர்கள் மற்றும் தற்போது பணி புரியும் இடங்கள் யாவை என்பதையும்;

(iii) நியமனங்கள் செய்யப்படுவதற்கு முன்னர் அதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) பதில் பணிப்பாளர்களாக நியமனம் பெற்றவர்களின்,

(i) முன்னர் பணி புரிந்த இடங்கள் யாவை என்பதையும்;

(ii) இலங்கை ஆசிரியர் சேவையில் அல்லது இலங்கை அதிபர்கள் சேவையில் வகுப்பு மற்றும் தரங்கள் யாவையென்பதையும்;

(iii) தொழில் மற்றும் கல்வித் தகைமைகள் யாவை என்பதையும்;

(iv) நியமனம் யாரால் வழங்கப்பட்டது என்பதையும்

அவர் வெவ்வேறாக குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கை கல்வி நிருவாகச் சேவைப் பிரமாணங்களின் படி பணிப்பாளர் பதவிகளில் பதில் கடமையாற்றும் அடிப்படையில் உத்தியோகத்தர்களை நியமிக்க முடியாது என்பதையும்;

(ii) அந்தச் சேவையில் பதவிகளுக்கான பதில் நியமனங்களை வழங்கும் அதிகாரம் பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு மாத்திரமே உள்ளதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) (i) தற்போது மேற்கூறிய சேவையிலுள்ள நிரந்தர பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக சேபைப் பிரமாணங்களுக்கமைய வர்த்தமானி அறிவித்தல் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு தகுந்த உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

2499/ ’12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சீனிக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி முன்னாள் அமைச்சர் கௌரவ பி.தயாரத்ன ஹிங்குரான சீனித் தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகளை 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதாக 2010 ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதி பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ள கூற்றுக்கமைய செயற்பட்டிருப்பின் தற்போது அந்த தொழிற்சாலையில் நாளொன்றுக்கு உற்பத்தி செய்யப்படும் சீனியின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) சீனி உற்பத்தி ஆரம்பிக்கப்படவில்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஹிங்குரான சீனித் தொழிற்சாலையில் பணிபுரியும் (பயிர்ச் செய்கைப் பிரிவு மற்றும் தொழிற்சாலையில்) மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அந்த ஊழியர் எண்ணிக்கை ஒவ்வொரு பதவிக்கமைய வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) இவர்களது சம்பளம், கொடுப்பனவு, சேலாப நிதியம் என்பவற்றை உரியவாறு செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2975/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கல்வி அதிகாரிகள் பொறுப்பின்றி செயலாற்றியமையின் காரணமாக மாத்தறை கல்வி வலயத்தில், 2012 ஆம் ஆண்டு இரண்டாம் தவணைப் பரீட்சைக்காக 2009ஆம் ஆண்டு வழங்கிய பரீட்சை வினாத்தாளொன்று மீண்டும் வழங்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) கல்வித்துறையில் இவ்வாறான சிக்கலான நிலைமைகள் தோன்றுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) இவ்வாறான நிலைமைகளுக்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3170/ '12

கௌரவ ஈ. சரவணபவன்,— மீள்குடியேற்ற அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மீளக்குடியமர்த்தப்படும் ஒவ்வொரு நபருக்கும் ரூபா 5,000/- ரூபா 20,000/- ரூபா 25,000/- என்ற அடிப்படையிலான தவணைகளில் ரூபா 50,000/- பணத் தொகை செலுத்தப்படுமென பல சந்தர்ப்பங்களில் வாக்குறுதி அளிக்கப்பட்டதென்பதையும்;

(ii) மேற்படி கொடுப்பனவை வழங்குவதாக கூறி பலரிடம் விபரங்களும் கையொப்பங்களும் பெறப்பட்டுள்ளன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வாக்குறுதியின் பிரகாரம் மீளக்குடியமர்த்தப்பட்ட அனைவருக்கும் ரூபா 50,000/- பணத் தொகை முழுமையாக வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், துன்பத்தை அனுபவிக்கும் மேற்படி மக்களுக்கு மேற்படி பணத்தை பெற்றுக்கொடுப்பதற்கு தொடர்ச்சியான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1976/ '11

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள நேபட கென்தகடுவ கிராமிய ஆஸ்பத்திரியில் நிலவுகின்ற பௌதீக மற்றும் மனித வளங்களின் பற்றாக்குறையின் காரணமாக அது மூடப்படும் ஆபத்துக்கு முகங்கொடுத்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இங்கு காணப்படுகின்ற குறைபாடுகளை துரிதமாக பூர்த்தி செய்து பிரதேசவாழ் மக்களுக்கு சிறந்த சுகாதாரச் சேவையினைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) இதற்காக திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், இதற்காக நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2208/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அபிவிருத்தி லொத்தர் சபை தொடர்பில் கடந்த ஐந்து ஆண்டுகளில்,

(i) பயன்படுத்தப்பட்ட மொத்த மூலதனம் மற்றும் ஒதுக்குகள் என்பன யாவையென்பதையும்;

(ii) இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(iii) மொத்த பணியாட்டொகுதியினர் எண்ணிக்கை, ஒரு பணியாளருக்கான செலவு அல்லது இலாபம் போன்றன யாதென்பதையும்;

(iv) கழிப்பனவுகள் அல்லது அரசாங்கத்திற்கு செலுத்திய அறவீடுகள் யாதென்பதையும்

வருடாந்த அடிப்படையில் கூறுவாரா?

(ஆ) (i) அபிவிருத்தி லொத்தர் சபையின் ஏதாவது பணம் கடந்த 5 ஆண்டு காலங்களில் பதிவழிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், பதிவழிக்கப்பட்ட தொகை யாதென்பதையும்;

(iii) என்ன காரணத்திற்காக அவ்வாறு செய்யப்பட்டது என்பதனையும்;

(iv) அவ்வாறு எப்போது நடைபெற்றது என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) அபிவிருத்தி லொத்தர் சபை, கடந்த 5 ஆண்டு காலப்பகுதியிலே அது பணம் பயன்படுத்திய விதத்தை விட சிறந்த முறையில் வினைத்திறனாக பயன்படுத்தியிருக்க முடியுமா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அது எவ்வாறு செய்யப்படுகின்றது என்பதையும்;

(iii) இன்றேல், ஏன் அவ்வாறு செய்யப்படவில்லை என்பதையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2438/ ’12

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தென் மாகாணத்தின் பிரதான பிரசவ வைத்தியசாலையான காலி மஹமோதர போதனா வைத்தியசாலையில் மாதமொன்றுக்கு அனுமதிக்கப்படும் கர்ப்பிணித் தாய்மார்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அந்த வைத்தியசாலையில் பிரசவ அறைகள் நோய்க்கிருமிகளற்ற நிலைக்கு உட்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(iii) 2012 சனவரி தொடக்கம் மாச்சு மாதம் வரையான கால எல்லைக்குள் அந்த வைத்தியாசலையின் குறைமாதக் குழந்தைகள் பிரிவில் ஏற்பட்ட மரணங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) அந்த சிசு மரணங்களுக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மஹமோதர வைத்தியசாலையின் குறைமாதப் பிரிவில் சிகிச்சை பெறும் குழந்தைகளுக்கு போதியளவு உயிர் பாதுகாப்பு இருப்பதையும் மற்றும் அங்குள்ள பதிவியணியினர் மிகவும் பொறுப்புடன் தமது கடமைகளை ஆற்றுகின்றார்கள் என்பதையும் அவர் உறுதிப்படுத்துவாரா?

(இ) (i) வைத்தியசாலையில் நிலவிய குறைபாடுகள் காரணமாக குழந்தைகள் மரணமடைவது போன்ற துர்ப்பாக்கியமான சம்பவங்கள் இடம்பெறாதவாறு அந்த வைத்தியசாலையின் நிலைமையை மேம்படுத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2500/ ’12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சீனிக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கந்தளாய் சீனித் தொழிற்சாலையை மீள் கட்டமைப்பதற்காக நீண்ட கால குத்தகையின் கீழ் தனியார் முதலீட்டாளர்களுக்கு கையளிப்பதற்காக 2011 ஆண்டு மார்ச்சு மாதம் முன்மொழிவுகள் /விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்ததென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) கந்தளாய் சீனித் தொழிற்சாலை தற்போது தனியார் முதலீட்டாளர் ஒருவருக்கு கையளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறெனின் அந்தக் கையளிப்பு மேற்கொள்ளப்பட்ட திகதி, கையளிக்கப்பட்ட நிறுவனம், கம்பெனி, அல்லது முதலீட்டாளர் யார் என்பதையும்;

(iii) அந்தக் கையளிப்பு மேற்சொள்ளப்பட்ட விலைகள் யாவை என்பதையும்;

(iv) அந்தத் தொழிற்சாலை கையளிக்கப்பட்ட நிபந்தனைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) தற்போது இந்த தொழிற்சாலையில் சீனி உற்பத்தியை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) எதிர்பார்க்கப்பட்ட நாளாந்த உற்பத்திக் கொள்வனவு எவ்வளவு என்பதையும்;

(iii) தற்போது உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாவிட்டால் அதற்கான காரணங்கள் என்ன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1977/ '11

கௌரவ புத்திக பத்திரண,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி புஷ்பதான மாவத்தையில் அமைந்துள்ள மலைநாட்டுச் சேவை வானொலி அலைவரிசையை மூடிவிடுவதற்கான திட்டமேதும் உள்ளதா என்பதையும்;

(ii) மூடப்பட்டதன் பின்னர் அது அமைந்துள்ள கட்டிடங்களுக்கு அருகாமையில் அமைந்துள்ள மகளிர் கல்லூரியொன்றின் விடுதிக்காகப் பெற்றுக்கொடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி (அ)(i) இன் பிரகாரம் மலைநாட்டுச் சேவை வானொலி அலைவரிசையை மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதானது, அரச நிறுவனங்கள் மூடப்படாதென அரசாங்கம் வழங்கிய வாக்குறுதியை மீறுவதாகுமென்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2241/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளுக்கள் தொடர்பாக,

(i) பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சுக்கு சொந்தமல்லாத கட்டிடங்களின் வாடகைக்காக ஏற்பட்ட மொத்த செலவினத்தையும்;

(ii) தனித்தனியாக ஒவ்வொரு கட்டிடத்தினதும், சதுர அடிக்கான கட்டணம் மற்றும் குத்தகை அல்லது வாடகைக்கான காலப்பகுதியையும்;

(iii) அமைச்சுக்குச் சொந்தமில்லாத அமைப்புகளிடமிருந்து வாடகைக்கு அல்லது குத்தகைக்குப் பெற்ற வாகனங்கள் மீது செலவிடப்பட்ட மொத்தத் தொகையையும்;

(iv) வாடகைக்குப் பெறப்பட்ட அல்லது குத்தகைக்குப் பெறப்பட்ட மொத்த வாகனங்களின் எண்ணிக்கையையும்;

(v) அமைச்சினால் வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய சேவைகளையும்;

(vi) இவ்வாறு வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சேவைகள் மீது ஏற்பட்ட செலவினத்தையும்;

(vii) அமைச்சின் மொத்த பணியாட்டொகுதியினரின் எண்ணிக்கையையும்;

(viii) வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளல் அடிப்படையில் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட ஆட்களின் எண்ணிக்கையையும்

அவர் வெவ்வேறாகத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2504/ ’12

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வட மாகாணத்தில் சம்பத்நுவர பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஜனகபுர வித்தியாலயத்தின் பௌதீக வளங்கள் மற்றும் மனித வளங்களில் பற்றாக்குறைகள் நிலவுகின்றன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஜனகபுர வித்தியாலயத்தில் நிலவுகின்ற பௌதீக வளங்கள் மற்றும் மனித வளங்களின் பற்றாக்குறைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி குறைபாடுகளை நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில் அதற்காக கழியும் காலம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2516/ ’12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை சுங்கத்தினால் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக விடுவிக்கத் தடை செய்யப்பட்டுள்ள இறக்குமதி செய்யப்பட்ட கிருமி நாசினி கொள்கலன்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அவ்வாறு தடை செய்யப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதற்குக் காரணமான விடயங்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

(iii) விடுவிப்பது தடை செய்யப்பட்ட மேற்படி கிருமி நாசினிக் கொள்கலன்களை இறக்குமதி செய்துள்ள கம்பனிகள் யாவை என்பதையும்;

(iv) அவ்வாறு கொண்டுவரப்பட்ட 14 கொள்கலன்கள் (containers) முறையாக பரிசீலனை செய்யப்படாது சுங்கத்தினால் அண்மையில் விடுவிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், மேற்படி கொள்கலன்களை விடுவிக்க அங்கீகாரம் வழங்கியுள்ள அதிகாரி யார் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2977/ ’12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்பட்ட நிதி மோசடி தொடர்பாக ஏற்புடைய அலுவலர்களினால் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கு எழுத்துமூல சான்றுகளுடன் விடயங்கள் முன்வைக்கப்பட்டிருந்த போதிலும், இற்றைவரை அதற்கு எவ்விதமான பிரதிபலிப்பும் கிடைக்கவில்லையென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன நிர்வாகத்தினால் இன்றளவில் மோசடி செய்யப்பட்டுள்ள பணத்தொகை மற்றும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை பற்றிய சரியான புள்ளிவிபரத் தகவல்கள் அடங்கிய அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) ஏற்புடைய அதிகாரிகளினால் நிதி மோசடிகளுடன் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் தொடர்பாக இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் மோசடியான உத்தியோகத்தர் களுக்கு மக்கள் பணத்தை சூரையாடுவதற்கு இடமளிக்காமல் இவர்களுக்கு எதிராக செயலாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2013 மார்ச்சு 22, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2243/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2012 ஆம் ஆண்டில்,

(i) வெகுசன ஊடக, தகவல் அமைச்சுக்கு சொந்தமல்லாத கட்டிடங்களின் வாடகைக்காக ஏற்பட்ட மொத்த செலவினத்தையும்;

(ii) தனித்தனியாக ஒவ்வொரு கட்டிடத்தினதும், சதுர அடிக்கான கட்டணம் மற்றும் குத்தகை அல்லது வாடகைக்கான காலப்பகுதியையும்;

(iii) அமைச்சுக்குச் சொந்தமில்லாத அமைப்புகளிடமிருந்து வாடகைக்கு அல்லது குத்தகைக்குப் பெற்ற வாகனங்கள் மீது செலவிடப்பட்ட மொத்தத் தொகையையும்;

(iv) வாடகைக்குப் பெறப்பட்ட அல்லது குத்தகைக்குப் பெறப்பட்ட மொத்த வாகனங்களின் எண்ணிக்கையையும்;

(v) அமைச்சினால் வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய சேவைகளையும்;

(vi) இவ்வாறு வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சேவைகள் மீது ஏற்பட்ட செலவினத்தையும்;

(vii) அமைச்சின் மொத்த பணியாட்டொகுதியினரின் எண்ணிக்கையையும்;

(viii) வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளல் அடிப்படையில் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட ஆட்களின் எண்ணிக்கையையும்

அவர் வெவ்வேறாகத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2266/ '12

கௌரவ புத்திக பத்திரண,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கொட்டவில, கம்புறுகமுவ என்ற விலாசத்தில் வசிக்கும் திரு கே. கே அட்வின்,

(i) இலங்கை போக்குவரத்து சபையில் (இபோச) நிரந்தர பயிற்சிபெற்ற சாரதியாக 1965 ஆம் ஆண்டிலிருந்து 1986 ஆம் ஆண்டு வரை சேவையாற்றியுள்ளர் என்பதையும்;

(ii) ஓய்வு பெற்ற பின்னரும் 1986 ஆம் ஆண்டிலிருந்து 1994 ஆம் ஆண்டு வரை ஒப்பந்த அடிப்படையில் சாரதியாக மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளார் என்பதையும்;

(iii) இதுவரை இவருடைய சேவைக்காலத்தின் பிரகாரம் இவருக்கு உரித்தாக வேண்டிய ஊழியர் சேமலாப நிதிய அனுகூலங்கள், பணிக்கொடைத் தொகை மற்றும் வேறெந்தவொரு கொடுப்பனவும் செலுத்தப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையினால் திரு அட்வினுக்கு செலுத்தப்பட வேண்டியுள்ள ஊழியர் சேமலாப நிதிய அனுகூலங்கள், பணிக்கொடைத் தொகை மற்றும் இதர கொடுப்பனவுகளின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(ii) உடல் ரீதியாக பலவீனமான நிலையில் இருக்கும் திரு. அட்வினுக்கு மேற்படி தொகையை செலுத்துவதற்கும் இருபது வருடங்களுக்கு மேலாக இபோசவினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த மேற்படி தொகைக்கான வட்டித் தொகையொன்றை செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2505/ ’12

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வட மாகாணத்தில் சம்பத்நுவர பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள சம்பத்நுவர வித்தியாலயத்தில் பௌதிக வளங்கள் மற்றும் மனித வளங்களில் பற்றாக்குறைகள் நிலவுகின்றன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) சம்பத்நுவர வித்தியாலயத்தில் நிலவுகின்ற பௌதீக வள மற்றும் மனித வளங்களின் பற்றாக்குறைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி குறைபாடுகளை நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில் அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2634/ ’12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 ஆம் ஆண்டின் மாச்சு, ஏப்பிறல் மாதங்களில் இலங்கையில் நடத்தப்பட்ட டெஸ்ட் கிரிக்கட் போட்டித் தொடரில் உள்ளடங்கிய போட்டிகளின் எண்ணிக்கை யாவையென்தையும்;

(ii) மேற்படி போட்டிகள் நடாத்தப்பட்ட விளையாட்டரங்குகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு விளையாட்டரங்கிலும் பார்வையாளர் கூடங்களிலுள்ள ஆசனங்களின் எண்ணிக்கை யாவையென்பதையும்;

(iv) மேற்படி விளையாட்டரங்குகளில் ஆசனங்களுக்காக அறவிடப்பட்ட கட்டணங்கள் யாவையென்பதையும்;

(v) இப்போட்டித் தொடரைக் கண்டுகளிப்பதற்காக சந்தைப்படுத்திய டிக்கெட் ஒன்றின் விலை யாதென்பதையும்;

(vi) மேற்படி டிக்கெட்டின் செல்லுபடியாகும் காலப்பகுதி யாதென்பதையும்;

(vii) மேற்படி விளையாட்டரங்குகளில் பார்வையாளர் ஆசனமொன்றுக்கான குறைந்தபட்ச பணத்தொகையாக ரூபா. 5000.00 அறவிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(viii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2978/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிவில் விமான சேவைகள் அதிகார சபை தாபிக்கப்பட்டு 10 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் இதுவரை மேற்படி நிறுவனத்துக்கு நிரந்தரமான கட்டடமொன்று இல்லையென்பதையும்;

(ii) மேற்படி அதிகாரசபையின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளினால் அரச நிதி முறைசாரா விதத்திலும் கவனயீனமாகவும் செலவு செய்யப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) கடந்த 10 வருடங்களாக சிவில் விமான சேவைகள் அதிகாரசபை பேணிவரப்படுகின்ற கட்டடத்துக்கு செலுத்தப்பட்டுள்ள வாடகைத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) நிலத்துக்கான வாடகையாக பெருமளவிலான குத்தகைத் தொகையை செலுத்தும் மேற்படி அதிகாரசபைக்காக நிரந்தரமான கட்டடமொன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) மேற்படி நிறுவனத்தின் நிதியை கவனயீனமாகக் கையாண்ட அதிகாரிக்கு எதிராக ஏதேனும் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3171/ '12

கௌரவ ஈ. சரவணபவன்,— தேசிய மொழிகள், சமூக ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மொழிக் கொள்கை மீறப்படுமாயின் அதற்கெதிராக கடும் நடவடிக்கை எடுப்பதாக வெளியிட்டுள்ள தமது கூற்றுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆமெனில், தமிழ் மொழி மூலமான பாடசாலைகளின் அதிபர்களுக்கு சிங்கள மொழியில் மாத்திரம் அனுப்பப்படுகின்ற இலங்கை அதிபர் சேவையின் பதவி உயர்வுகள் தொடர்பான சகல ஆவணங்களினதும் தமிழ்ப் பிரதிகள் உரிய பாடசாலைகளுக்குக் கிடைப்பதை உறுதி செய்வதற்கும்;

(ii) ஊழியர் சேமலாப நிதியமானது, அதன் பயனாளிகளிடமிருந்து தமிழ் மொழி மூலம் கிடைக்கின்ற கோரிக்கைகளுக்கு சிங்கள மொழியில் மாத்திரம் பதில் அனுப்புவதற்குப் பதிலாக தமிழ் மொழியிலேயே பதில் வழங்க உரிய நிறுவனங்களை ஆற்றுப்படுத்துவதற்கும்

நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2245/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— கலாசார, கலை அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையிலுள்ள உலக மரபுரிமைகள் மற்றும் தலங்கள் யாதென்பதையும்;

(ii) இவ்வெழில்மிகு தலங்களை பராமரிப்பதற்கும் செம்மையாக வைத்திருப்பதற்கும் செலவிடப்பட்ட பணத்தின் அளவு யாதென்பதையும்;

(iii) கடந்த மூன்று வருடங்களில் இந்த உள்ளூர் உலக மரபுரிமை தலங்களுக்கு விஜயம் செய்த ஆட்களின் எண்ணிக்கை ஆண்டு ரீதியாக யாதென்பதையும்;

(iv) கடந்த மூன்று வருடங்களில் அத்தலங்களில் பெற்றுக் கொண்ட வருமானம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) மேற்குறிப்பிட்ட தலங்களில் 2010 ஆம், 2011 ஆம் ஆண்டுகளில் நேரடியாகவும் மறைமுகமாகவும் சேவையில் ஈடுபட்டிருந்தோரின் எண்ணிக்கையை தனித்தனியாக கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2439/ '12

கௌரவ புத்திக பத்திரண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தில் நில்வளா பள்ளத்தாக்கின் இருமருங்கிலும் அமைந்துள்ள இன்னாக் காட்டுப் பிரதேசத்தில் பெருந்தொகையான வயல்கள் பாழடைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி காணிகளை நெற்பயிர்ச்செய்கைக்காகவோ வேறு பயிரினங்களைப் பயிரிடவோ பொருத்தமான வகையில் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திட்டம் யாது என்பதையும்;

(iii) தற்போது மேற்படி நிலத்தைச் சாகுபடி செய்தல் தொடர்பான நடவடிக்கைகளுக்காக நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், ஒதுக்கப்பட்டுள்ள மொத்தப் பணத்தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2506/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வட மாகாணத்தில் சம்பத்நுவர பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள கிரி இப்பன்வெவ வித்தியாலயத்தில் பௌதீக வளங்கள் மற்றும் மனித வளங்களில் பற்றாக்குறைகள் நிலவுகின்றன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) கிரி இப்பன்வெவ வித்தியாலயத்தில் நிலவுகின்ற பௌதீக வள மற்றும் மனித வளங்களின் பற்றாக்குறைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி குறைபாடுகளை நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில் அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2635/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டில் மத்திய மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்துச் சேவை அதிகாரசபையினால் வழங்கப்பட்டுள்ள புதிய வீதி உரிமப்பத்திரங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இவ்வுரிமப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள வீதிகள் யாவையென்பதையும்;

(iii) 2000ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பயணிகள் போக்குவரத்துச் சேவை அதிகாரசபை நியதிச் சட்டத்திற்கு ஏற்றவாறு இவ்வுரிமப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இவ்வுரிமப் பத்திரங்களை அங்கீகரித்த பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(v) இவ் அங்கீகாரத்தை வழங்கியவர்களின் கையொப்பத்தைக் கொண்ட ஆவணங்களைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vi) இவ்வுரிமப் பத்திரங்கள் வழங்கப்படுகையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப்பத்திர நடைமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மத்திய மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைக்குரிய வீதிகள் யாவை என்பதையும்;

(ii) 2011ஆம் ஆண்டில் மத்திய மாகாணத்தில் ஒவ்வொரு வீதிக்கும் அங்கீகரிக்கப்பட்டுள்ள பஸ் வண்டிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி வருடத்தில் இந்த ஒவ்வொரு வீதியிலும் நிலவிய பஸ் வண்டி வெற்றிடங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2979/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா பாடநெறியை கற்ற சுமார் 2000 பேருக்கு அரச சேவையில் நிரந்தர நியமனங்களை வழங்காதிருப்பதற்கும்;

(ii) கீழைத்தேய மொழிகள் தொடர்பான பரீட்சையில் சித்தியடைந்த டிப்ளோமாதாரிகளுக்கு நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் பதவிகளை வழங்காதிருப்பதற்கும்

அரசாங்கம் தீர்மானித்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது உயர் தேசிய பொறியியல் டிப்ளோமாவையும் கீழைத்தேய மொழிகள் தொடர்பான பரீட்சையையும் பூர்த்தி செய்து தொழில் எதிர்பார்ப்புடன் இருப்போரின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) உயர் தேசிய பொறியியல் டிப்ளோமாதாரிகளுக்கு அரச நிரந்தர நியமனங்கள் வழங்காதிருப்பதற்கு தீர்மானிக்கப் பட்டமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) உயர் தேசிய பொறியியல் டிப்ளோமாதாரிகளுக்கு அரச நியமனங்களையும் கீழைத்தேய மொழிகள் தொடர்பான பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் பதவிகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2314/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— தொழில், தொழில் உறவுகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இற்றைவரை,

(i) நாட்டிலுள்ள ஊழியர்களுக்குரிய ஊழியர் சேமலாப நிதியின் மொத்தப் பெறுமதி யாதென்பதையும்;

(ii) ஊழியர் சேமலாப நிதியம் முதலீடு செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள் யாவையென்தையும்;

(iii) ஊழியர் சேமலாப நிதியத்திலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) ஊழியர் சேமலாப நிதியத்தின் இசைவற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) இசைவற்ற ஊழியர் சேமலாப நிதிய உறுப்பினர்களுக்குரிய பணம் ஏன் அறவிடப்படவில்லை என்பதையும்;

(vi) அறவிடப்படாத உறுப்பினர்களின் பணப் பெறுமதி யாதென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2446/ '12

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை – கொழும்பு அதிவேக வீதியில் நூப்பே தொடக்கம் மாத்தறை / கொடகம வரையிலான வீதியை விஸ்தரிக்கின்றபோது காணிகள் சுவீகரிக்கப்பட்டமையால் சில காணி உரிமையாளர்களின் காணித் துண்டுகள் ஆறு பர்ச்சஸ்களை விடக் குறைவடைந்துள்ளதென்பதையும்;

(ii) அத்தகைய காணிகளில் நிர்மாணப் பணிகளுக்காக மாத்தறை நகர சபை அனுமதியளிப்பதில்லையென்பதையும்;

(iii) எனினும் மாத்தறை போதி மரத்தடியிலிருந்து நூப்பே வரை தர்மபால மாவத்தையை விஸ்தரிக்கின்றபோது எஞ்சிய காணிகளில் ஆறு பர்ச்சஸ் குறைந்தபட்ச எல்லையை பொருட்படுத்தாது, வீதி அபிவிருத்தி அதிகார சபையியினால் எல்லை குறிக்கப்பட்ட இடத்திலிருந்து கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு மேற்படி நகர சபை அனுமதியளித்துள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) ஒரே நகர சபை ஆளுகைப் பிரதேசத்தில் மேலே கூறப்பட்டவாறு இரண்டு முறையியல்கள் நடைமுறைப்படுத்தப்படுவதனால் ஒரு பிரதேசத்தைச் சேர்ந்த மக்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்படுகின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) மேற்படி அ (iii) ல் குறிப்பிடப்பட்டுள்ள தளர்த்தப்பட்ட நிபந்தனைகளின் கீழ் நூப்பே – கொடகம வீதியின் இருமருங்கிலும் அமைந்துள்ள சிறிய காணிகளிலும் நிர்மாணிப்புகளுக்கு அனுமதி வழங்குவதற்காக நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2507/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) வட மாகாணத்தின் சம்பத்நுவர பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள எத்தாவெட்டுனவெவ வித்தியாலயத்தில் பல பௌதீக மற்றும் மனித வளப் பற்றாக் குறைகள் காணப்படுகின்றன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) எத்தாவெட்டுனவெவ வித்தியாலயத்தில் காணப்படுகின்ற பௌதீக மற்றும் மனித வளங்களுக்கான குறைபாடுகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி குறைப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரார என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக எடுக்கும் காலம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2636/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டினுள் மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபைக்கு ஆட்சேர்க்கப்பட்டுள்ள புதிய ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஊழியர்களின் பதவிகள், ஆட்சேர்க்கப்பட்ட திகதிகள் மற்றும் கல்வித் தகைமைகள் தனித் தனியாக யாதென்பதையும்;

(iii) ஏற்றுக்கொள்ளப்பட்ட செயல்முறைகளின் பிரகாரம் நேர்முகப் பரீட்சையை நடத்தி மேற்படி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய ஏனைய விண்ணப்பதாரர்களின் தகவல்கள் யாவையென்பதையும்;

(v) மேற்படி ஆட்சேர்ப்பின் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட செயல்முறைகள் பின்பற்றப்படவில்லையெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(vi) மேற்படி புதிய ஆட்சேர்ப்புக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(vii) ஆமெனில், அத்துடன் சம்பந்தப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?